# ஞானசம்பந்தம்

மலர் 11.]   கர௵ மாசி௴ 10—3—52.   [இதழ் 4.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



தருமை நகரின் தோற்றம்

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

# சீகாழியில் சித்தாந்த மகாநாடு

சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 17—3—52 அன்று நடைபெற இருக்கும் அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 14, 15, 16, 17—3—52 ஆகிய நான்கு நாட்களிலும் சைவ சித்தாந்த மாநாடு நடைபெறும். பிரபந்தம், சங்க இலக்கியம், திருமுறை, சாத்திரம் என்ற முறையில் அவ்வவற்றில் காணப் பெறும் சித்தாந்தக் கருத்துக்கள் அடங்கிய சொற் பொழிவுகள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களைக் கொண்டும், தக்க புலவர் பெருமக்களைக் கொண்டும் நிகழ்த்துவிக்க ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கின்றது. அவ்வவற்றின் சிறப்புக்கள் பற்றிய உரையாடல்கள், தேவஸ்தானத் தேவார வகுப்பு மாணவர்களும், சபா நாயக முதலியார் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவி களும் நிகழ்த்துவார்கள். இவைகளோடு நாடோறும் தேவார இன்னிசை யரங்கும் தக்க இன்னிசைக் கருவி களுடன் இன்னிசைவாணர்களைக்கொண்டு நடத்தப் பெறும்.

13—3—52 அன்று தேவஸ்தானத் தேவார வகுப்பு இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவும் கொண்டாடப் பெறும்.

இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகள் யாவும் பழநி சைவசித்தாந்த சரபம் காசிவாசி சிவத்திரு ஈசான சிவாசாரியார் அவர்கள், தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், கோவை சிவக்கவிமணி திரு C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், சீகாழி பெருநிலக் கிழார் திரு S. சதாசிவமுதலியார் அவர்கள் ஆகிய பெரியோர்களின் தலைமையில் நடைபெறும். சீகாழி பெருநிலக்கிழார் திரு C. இராமனாத முதலியார் அவர்கள் திறப்பாளராக இருந்து திறப்புரை மொழிய இசைந் துள்ளார்கள். அன்பர்கள் அனைவரும் வந்து மகாநாட்டில் கலந்துகொண்டு, கொண்டும் கொடுத்தும் இன்புறுவார் களாக.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] கரஞூ மாசிமீ 10—3—52. [இதழ் 4

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

# சென்னையில் நல்ல முடிவு

சென்னையில் திருமறைத்திருவிழா வெகு நன்ருக ஒன்பது நாட்கள் நடைபெற்றிருக்கிறது. சென்னை மாகாணத்திலுள்ள பல பிரமுகர்கள் கலந்துகொண்டிருக்கிருர்கள். தருமபுர ஆதீன அடியார் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் கலந்துகொண்டிருக்கின்றுர்கள். தக்க பெரியோர்கள் தலைமை வகித்திருக்கிருர்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள், தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவர்களுடைய ஆசியுரைகள் வாசிக்கப்பெற்றன. நல்ல முடிவுகள் பல காணப்பட்டன. தீர்மானங்கள் யாவும் வருங்காலச் சமய உலகைப் பண்படுத்தக்கூடியனவே என்று எதிர்பார்க்கலாம். சொல்லுதல் சுலபம் செய்தல் அருமை என்று வள்ளுவர் சொல்லுவார். திட்டங்களை ஏட்டில் தீட்டுவதும் மேடையில் பேசுவதும் சுலபந்தான். செயல்முறையில் உலக்கைக்குப் பிடித்தால் உளிப்பிடிக்குத்தான் தேறும். இது பலபல ஆண்டுகளாகச் சமயத்துறையில் பிரசாரம் செய்ததின் அநுபவம்.

தீர்மானம் கொண்டுவந்தவர்களில் ஸ்ரீமான். பி. ஸ்ரீ. ஆசாரியார் அவர்கள் உயர்ந்த பண்பாடு உடையவர்கள். அவர்கள் கைவளம் எளிய தமிழில் இனிமையோடு எல்லார்மனத்தினும் வேகமாகச் சென்று பாயும். திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் ஒரு சைவ சமயப் பாதிரியாராக தமது முழுநேரத்தையும் சைவ சமயத்திற்கே அர்ப்பணித்த பெரியார். டாக்டர் திருமூர்த்தி அவர்கள் நல்ல காரியங்களில் எல்லாம் பங்கு கொள்ளும் பெரிய மனிதர். நமது கம்பர் கழக அமைச்சர் சோமசுந்தரத்தைப் பற்றிச் சொல்லவேவேண்டியதில்லை. அவர் சென்னையில் நடக்கும் இலக்கிய மகாநாடுகளுக்கும், சமய மகாநாடுகளுக்கும் செயலாளராக இருந்து பணியாற்றும் கரும வீரர். நமது மதிப்பிற்குரிய திரு. டி. எம். சின்னையாப்பிள்ளை அவர்களோ அறநிலையப் பாதுகாப்பாளராகப் பல ஆண்டுகள் அநுபவம் பெற்றவர்கள். சமய ஸ்தாபனங்கள் அன்றன்றைக்குச் செய்யும் சமயப்பணிகள் அனைத்தையும் அன்றன்றைக்கே அறிந்து மகிழும் வாய்ப்புடையவர்கள். இப்படிப்பட்ட பெரியவர்கள் ஒன்றுகூடி, நமது தமிழ்நாட்டில் விளங்குகின்ற சமய ஸ்தாபனங்கள் எவை? எங்கெந்த சமயஸ்தாபனங்கள் எவ்வளவு நாளாக என்ன என்ன சமயத்தொண்டுகள் செய்துவருகின்றன? இதுவரை செய்த சமயப் பிரசாரங்களால் எவ்வளவுதூரம் மக்கள்மனம் மாறி இருக்கிறது? என்பனவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து இனிச் செய்யவேண்டிய வேலைகளுக்கு எங்கெந்த முறையில் திட்டங்கள் வகுக்கலாம் என்பனவற்றை இந்த மகாநாட்டின் மூலம் தீர்மானித்திருக்கிருர்கள். இது தமிழுலகம் முழுதும் மிக மகிழ்ச்சியோடு வரவேற்கக்கூடிய விஷயம்.

மடாதிபதிகளும் தர்மஸ்தாபன தேவாலய டிரஸ்டிகளும் இந்தப் பொது மக்களும் கூடி வேலைத்திட்டங்களை வகுத்துக் கொண்டு ஒருவர் செய்ததையே மற்றவர் செய்யாமல் வேலையைப் பகிர்ந்துகொண்டு ஒத்துழைத்தால் நாடு உயரும் என்று எல்லாரும் எதிர்பார்க்கக்கூடியதே.

சமயக்கல்விப் பட்டதாரிகளைப் படைப்பது மிகவும் இன்றியமையாததே. சர்வகலாசாலைகளில் இன்றைக்கும் தத்துவ சாஸ்திரப் பிரிவுகள் இருக்கின்றன. அவைகளில் படிப்போர்க்கு உபகாரச்சம்பளங்கள்கூடக் கொடுக்கப்படுகின்றன,

 161

ஆயிரம் இரண்டாயிரம் என்று பெரும்பரிசுத் திட்டங்களும் இருக்கின்றன. அப்படி இருந்தும் அதில் எத்தனைபேர் சேர்ந்து படிக்கின்றார்கள். தத்துவ சாஸ்திரப் பட்டதாரிக்கு உலகியல் வாழ்வில் என்னநிலை அளிக்கப்பட்டிருக்கின்றது. அவருடைய படிப்பு எவ்வளவு தூரம் மக்களுக்குப் பயன்படுகிறது. ஆதலால் அவர்களுக்கென்று ஒருநிலையும் தகுதியும் ஏற்படுத்தியபிறகு, கல்லூரி திறந்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். முதலில் செய்யவேண்டிய வேலை, தத்துவ சாஸ்திர அறிவாளிகளுக்கு இம்மை வாழ்வில் நன்மை அடையச் செய்வதே; 'சமயஸ்தாபன நிர்வாகங்களுக்கு B. D., D. D. பட்டங்களை ஏற்படுத்தி அதில் தேர்ந்துவருபவர்களுக்கே தேவஸ்தான உத்யோகங்கள் அளிக்கப்படவேண்டும்' என்று கூட 29-ம் ஆண்டிலே ஒரு அறிஞர் சொல்லியிருக்கிறார். மற்றொன்று சமயஞானக் கல்லூரியைத் தொடங்கிவைத்து நூறு இருநூறு பேர்களுக்குச் சமய ஞானம் கொடுக்கப்பட்டால் மட்டும் போதாது. இந்து மாணவர் எல்லோருக்கும் சமய அடிப்படைக் கல்வியாவது வேண்டும். எல்லாக் கல்லூரி களிலும் சமயபோதனை இன்றியமையாதது என்று திட்டம் ஏற்படுத்தினால் விரைவில் சமய உணர்ச்சி பரவ வழி உண்டென்று தெரிவித்துக்கொள்கிறோம்.

பலஸ்தாபனங்கள் செய்துவரும் சிறுசிறு முயற்சிகளை ஒன்று கூட்டவேண்டும் என்று ஒரு தீர்மானம் கூறுகிறது. முயற்சியல் சிறிது பெரிது என்பதைப் பயனைக்கொண்டு நிச்சயிப்பதா? பணத்தைக் கொண்டு நிச்சயிப்பதா? செய்கின்றவர்களையும் செய்யத் தூண்டுகின்றவர்களையும் அதற்கு ஒத்தாசையாயிருக்கின்றவர்களையும் கொண்டு நிச்சயிப்பதா? என்று கேட்கிறோம். ஆத்மாபிமானம் என்பது அனைவர்க்கும் சொந்தம். ஆதலால் தாங்கள் செய்யும் முயற்சியே பெரிது; தாங்கள் சொல்லும் யோசனையே பெரிது என்று எழுதுவது இயற்கையே. ஆதலால் ஒரு ஆண்டிற்கு ஐம்பதினாயிரம் ரூபாய்க்குமேல் செலவழித்து அநேக அறிவாளிகளைக்கொண்டு ஆண்டு முழுமையும் பலஇடங்களில் நடத்தப்படும் பிரசாரமும் மிக்க பிரயோசனமானது. தலைநகரம் தக்கவர்கள் பலரைத் தன்னிடத்தில் சேர்த்துவைத்திருப்பதால், பல பத்திரிகைகளின் அவதாரஸ்தலமாக இருப்பதால் ஒருசிலர்களுக்குச் சொற்பச்

செலவில் நடத்தப்படும் விழா உருப்படியான பெருமுயற்சி யாகலாம். முப்பத்திரண்டுவகைக் கறிகளோடு ஒரு நாளைக்கு நடக்கும் விருந்து ஓராண்டுப் பசியைப் போக்கிவிட முடியாது. எறும்பூரக் கற்குழிவதுபோலச் சிறிது சிறிதாகச் சமயப்பயிற்சி சிந்தனையிற் சேர்க்கப்படுதல் வேண்டும். சிறு துளிதான் பெரு வெள்ளமாகும். ஆதலால் அங்கங்கே கூடும் சமயப் பெரிய மகாநாடுகள், சமயஸ்தாபனங்கள் அங்கங்கே நடத்தும் சிறுசிறு முயற்சிகளையும் பாராட்டுதல் வேண்டும். அதற்கு மேல் வளர்ச் சிக்கு வேண்டியமுயற்சிகளை வகுத்துக்கொடுக்கவேண்டும். தமிழ் நாட்டில் பல மடங்கள் இருக்கின்றன அவற்றில் ஐந்தாறு ஆதீனங்கள் மிகப் பிரசித்தமானவை,

**திருவாவடுதுறை ஆதீனம்** பல சமயசாஸ்திரங்களை அச்சிட்டு வழங்கியும், நாகர்கோவில், அம்பாசமுத்திரம், தூத்துக்குடி, திருச்செந்தூர் முதலிய பல இடங்களில் பிரசார கர்களை நியமித்தும் பணியாற்றி வருகிறது. அவ்வாதீனத்தில் இப்போது இருக்கிற இருபத்தோராவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிர மணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆட்சி ஏற்ற சொற்ப காலங்களில் ஐந்து சாஸ்திரங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். திருவிடைமருதூரில் ஐஸ்கூலும், தஞ்சையில் அம்பலவாணர் ஐஸ்கூலும், கரந்தைப் புலவர் கல்லூரியும் நடந்துவர மாதந்தோறும் பெரும்பொருள் அளித்து வருகிறார் கள். இன்னும் பல சமயப்பணிகள் செய்ய அவர்கள் திட்டம் இட்டிருக்கிறார்கள்.

**திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்** எப்பொழுதுமே செந்தமிழுக்கும் சைவத்திற்கும் ஒரு பேர் அரணாக நிற்பது. அந்தத்திருமடத்தில் இப்போது எழுந்தருளி இருக்கிற ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தமிழ்வளர்க்குந் தந்தையாக விளங்குகின்றார்கள். தெய்வத்தமி ழறிவு சிறுவர்களின் உள்ளத்தே திகழ ஆயிரம் ஐயாயிரம் பதினாயிரம் இலக்ஷமாக முதலீடு செய்து அறக்கட்டளை அமைத்திருப்பதை அறியாதார் அறியாதாரே. சென்ற மாதங் கூட, தாயுமானவர்பாடலைப்படிப்பவர்க்கென்று ஐயாயிர ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். இதனை இவ்விதழிலேயே வெளி யிட்டிருக்கிறோம். திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி வைத்துத்

தமிழை வளர்த்து வருகிறார்கள். ஸ்ரீவைகுண்டத்தில் குமர குருபரர் திருப்பெயரால் நூல்நிலையம், அச்சகம், ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இலவச உணவு விடுதி, கலைக்கோயில், வாசகசாலை ஆகியன அமைத்துப் பாது காத்து வருகிறார்கள். பன்னிரண்டு திருமுறைகளையும் முறையாக அச்சிட்டு இலவசமாகவும் அடக்க விலைக்கும் வழங்கி வருகிறார்கள். குமரகுருபரன் என்னும் மாதத்தாளையும் நடத்தி வருகிறார்கள். இவ்வாறு எண்ணிலடங்காத பல லட்ச ரூபாய்க்கு ஸ்ரீகாசிமடம் அறப்பணிகள் அமைத்திருக்கிறது.

**குன்றக்குடி ஆதீனமும்** நெடுகிலும் சமயத் தொண்டு செய்து வந்திருக்கிறது. இன்றைக்கு இளவரசாக இருக்கும் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் புலங்கள் தோறும் சென்று பாயும் வாய்க்காலைப் போலச் சென்று சென்று சமயப்பணி செய்து வருகிறார்கள். திருவாசக விழாவைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அவ்விழா இடம் இடங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன. 12, 13—3—52 ஆகிய இரண்டு நாட்களிலும் அவ்வாதீனத்தில் திருக்குறள் திருவிழா கொண்டாட இருப்பதும், பல அறிஞர்கள் அதில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்ற இருப்பதும் அன்பர்கள் அனைவரும் அறிவர்.

**தருமபுர ஆதீனம்** இதுவரை இருநூற்று ஐம்பத்தைந்து புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. திருமுறைகளில் திருவாசக மும் தேவாரங்களும் மதிப்பிற்குரிய பதிப்பாக எல்லார் கையிலும் விளங்கச் செய்தது. திருக்குறட்பதிப்பருமையைச் செந்தமிழ் நாடு பாராட்டி வருகின்றது. தமிழ்க் கல்லூரியை வைத்துக் கல்லூரிப் பாடத் திட்டங்களோடு சிவஞான சித்தியார் முதலிய சமயபாடங்களை நடத்தி வருகின்றது. வடமொழிக் கல்லூரி அமைத்திருக்கிறது. வேதசிவாகம பாட சாலை அமைத்து ஆலய பூசை முறைகளை ஆதிசைவமாணவர் களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிற்றுவிக்கிறது. தேவாரப் பாடசாலையும் அங்ஙனமே அமைத்திருக்கிறது. இன்னும் ஆண்டுகள் தோறும் குருபூஜை விழாவில் தென்னாட்டிலுள்ள அறிஞர்கள் எல்லாரையும் கூட்டிவைத்துத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டைப் பல ஆண்டுகளாக நடத்தி வருகிறது.

திருவெம்பாவை மாநாடு, திருமுறை மாநாடு, மெய்கண்டான் மாநாடு இவைகளைப் பதினைந்தாண்டுகளுக்கு முன்பேயே, தொடர்ந்து கூட்டி வரும் பெருமை இவ்வாதீனத்திற்கே உரியது. பிரசாரவாகனம் ஒன்றமைத்து இந்தமூன்ருண்டுகளாகக் கோயம் புத்தூர்ஜில்லா நீங்கலாக ஏனைய எல்லாப் பகுதிகளிலும் சமயப் பிரசாரம் செய்து வருகிறது, இப்படித் தமிழ்நாட்டு ஆதீனங்கள் முடிந்தவரையில் சமயப்பணி செய்து வருகின்றன என்பதும், மேலும் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றன என்பதும் உறுதியாகத் தெரியவருகின்றன, இத்தகைய பணிகளுக்கு இந்த மாநாட்டுத் தீர்மானங்களும், மடாதிபதிகள் திருமுறைகளைப் பிரசுரஞ் செய்வதில் ஈடுபடவேண்டும் என்ற ஆலோசனையும் சமயஸ்தாபனத் தலைவர்களுக்கு ஊக்கமளிப்பதாக ஆகவேண்டு மென்று சர்வேஸ்வரனை வேண்டிக்கொள்ளுகிருேம்.

வருமானமற்ற கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்யவும் நித்திய பூஜை செய்யவும் வேண்டு மென்ற தீர்மானத்தைப் பற்றிய அவசியத்தை எமது ஞானசம்பந்தத்தின் சென்ற மார்கழிமீ இதழில் கல்வெட்டு ஆதாரத்தோடு வற்புறுத்தி இருக்கிருேம். அது உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய வேலைதான்.

மற்ருென்று எந்த நிகழ்ச்சிக்கும் பிரசாரம் இன்றி யமையாதது. வாய்ப்பிரசாரத்தோடு பத்திரிகைப் பிரசாரமும் சேர்ந்தால்தான் பரிமளிக்கும். சமயம் பரவ வேண்டும்-ஆஸ்திகம் செழிக்கவேண்டும் என்று கூறுகின்ற பத்திரிகைகள் சமயப்பிரசாரத்தை யார் நடத்தினுலும் எங்கே நடத்தினுலும் தக்க விளம்பரம் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிருேம். உழைப்பவனை உற்சாகப் படுத்துவதுதானே அவன் உழைப்பைப் பெருக்க வழியாக இருக்கிறது.

சமயஸ்தாபனத்திலுள்ள பெரியவர்கள் என்கடன் பணி செய்துகிடப்பதே என எண்ணுபவர்கள். மூலையில் இருந்து உழைக்கவேண்டியது நம் கடமை முற்றத்தில் கொண்டுவந்து நிறுத்த வேண்டுவது முதல்வன் கடமை என்பது அவர்கள் திருவுள்ளம். அவர்கள் இதுவரை விளம்பரத்தை விரும்பாமல் இருப்பதும் இந்நாளைக்கு ஒவ்வாத செயல் போல இருக்கிறது.

அவர்களும் மற்றவர்களைப்போலத் தாங்கள் செய்யும் பணிகளைப்பற்றித் தக்க விளம்பரங்கள் செய்திருப்பார்களானால் இன்று ஆலோசனை சொல்பவர்களுக்கு அப்பணிகள் மிகமிக உதவியாக இருக்கும். ஆனாலும் சமயஸ்தாபன நிகழ்ச்சிகள் எல்லாருக்குந் தெரியப் பத்திரிகை உலகமும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். நாஸ்திகம் பரவுவது பிரசாரத்தால் மட்டுமல்ல; பல பத்திரிகைகளாலும் என்பதை ஞாபகப் படுத்துகிறோம். ஆதலால் சமயத்துறைகளில் உழைப்பவர்கள் யாராயிருந்தாலும் பத்திரிகை உலகம் போற்றியிருக்குமானால் இவ்வளவு தூரம் நாஸ்திகம் பரவியிருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனியாவது சமயப்பணியை யார் செய்தாலும் சிறு கிராமங்களில் செய்தாலுங்கூடப் பத்திரிகை உலகம் தக்கமுறையில் விளம்பரப்படுத்த வேண்டும். ஊக்கம் அளிக்கவேண்டும்.

ஆதீனத்திற்கு ஓர் சமயம் பிரமுகர் ஒருவர் வந்திருந்தார். அவரிடம் சிறிய வெளியீடுகள் பல கொடுக்கப்பட்டன. அவற்றைக் கையில் வாங்கிவைத்துக்கொண்டு அவர் இலேசான நடையில் விபூதியைப்பற்றியும் விரதங்களைப்பற்றியும் சின்னச் சின்னப் புத்தகங்கள் வெளியிட்டால் நல்லது என்று சொன்னார். இவைகளைக் கொஞ்சம் படித்துப்பார்த்து ஆலோசனை சொல்லுங்கள் என்று அவ்வாதீனத்தில் ஒருவர் அறிவித்தாராம். ஆதலால் வருங்காலச் சமயப் பணிக்குத் திட்டம் வகுக்கும் பெரியார்கள் இதுவரையில் இன்ன இன்ன ஸ்தாபனங்கள் இன்ன இன்ன பணியைச் செய்திருக்கின்றன; இனிமேல் இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று ஆலோசனை சொன்னால் நலமாகுமல்லவா!


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

**திருக்கயிலாய பாம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.**

**ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.**

# அருட்பாக்கள்

தென்னாப்பிரிகா - டர்பன். திரு. ச. மு. பிள்ளை. அவர்கள்.

சைவப் பெருமக்களாகிய நமக்கு உரிய தோத்திரப் பாசுரங்கள் அருட்பாக்கள் ஐந்துமாம். இவற்றைப்பஞ்ச பாசுரங்கள் என்று பகர்வதும் உண்டு. இவ்வைந்தும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பனவாம். இவற்றுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகிய மூவர் திருவாய்மலர்ந்தருளியது தேவாரம் எனப்படும். மாணிக்கவாசகர் மலர்வாய்ப் பிறந்தது திருவாசகம் எனப்படும். திருவிசைப்பா திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பது நாயன்மார்கள் ஓதியருளியதாகும். திருப்பல்லாண்டினைப் பாடினவர் சேந்தனாராவர். பெரியபுராணத்தைப் பாடியவர் சேக்கிழார்சுவாமிகளாவர்.

இவ்வைந்தும், நிறைந்த அருட்சக்தி உடையனவாயிலங்குதலால் அருட்பாக்கள் எனப்படும். அருட்சக்தியாவது, அருளிற் கூறினும் வெகுண்டே கூறினும், கூறுவோர் விரும்பியாங்கு விளைதலாகும். அருளிற் கூறுதல் வாழ்த்துரையாகும். வெகுண்டு கூறுதல் தீயன போயகல வெறுத்துரைத்தலாகும். என்பைப் பெண்ணாக்கியதும், முதலைவாய்ப் பிள்ளையை அழைத்ததும், முன்னையதின் பாற்படும். புத்தரை ஊமைகளாக்கியதும், புத்தநந்தி தலையில் இடி இடிக்கச் செய்ததும் பின்னையதின் பாற்படும். இவ்வாறு இவ்வருட்பாக்கள் ஐந்தானும் நிகழ்ந்த அற்புதங்கள் பலப்பல. சைவ சமயாசாரியர் நால்வர் செய்தருளிய அற்புதங்களனைத்தும் அன்னாரின் அமுத மொழிகளின் வன்மையையே புலப்படுத்துகின்றன.

ஞானப்பாடல்களுக்கு நிறைந்த தெய்வசக்தி யுண்டென்று நவில்வது, நம்முடைய நாட்டிலே நமது மொழியிலேயேயாகும். வேற்று நாட்டில், வேற்று மொழியில்

167.



இவ்வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தெய்வ சக்தி
யுடைமையினாலேயே நமது நூல்கள் எல்லையில் பெருமை
யுடையனவாக இலங்குகின்றன. தெய்வ சக்தி திகழ்
வதற்குக் காரணம் அவ்வின்பவுரைகளை யோதியருளிய
அடியவர்கள் உள்ளத்திலே இறைவன் வீற்றிருந்து
உண்மையுரைகளை அன்னோர்வாயிலாக ஓதியருளுதலே
யாகும். இதனை 'எனதுரை தனதுரையாக நீறணிந்
தேறுகந்தேறிய நிமலன்' என்னும் திருஞானசம்பந்தப்
பெருமானார் திருவாக்கும் நன்கு வலியுறுத்தும். எனவே
'அடியவர் வாக்கு ஆண்டவன் வாக்காக விளங்குதலால்'
அவ்வாக்கு அருள்வாக்காகத்திகழ்தல் இனிதுபுலப்படும்.

அவ்வருள்நூல்கள் ஐந்தினும் உள்ள தோத்திரப்
பாக்களனைத்தும் பத்திச்சுவை நனிசொட்டும் பண்புடை
யனவா யிலங்குகின்றன. ஆகவே அன்புக் கடலாக
விளங்கும் இவ்வருட்பாக்களைந்தினையும் சைவப்பெருமக்க
ளனைவரும் அவசியம்தினந்தோறும் பாராயணஞ்செய்து
பயன் துய்த்தல் வேண்டும். நமது சிவபெருமான்
தோத்திரப் பாசுரங்களில் என்றும் பெருவிருப்புடைய
வர். பாடுவோர்க்கு எல்லாநலன்களையும் ஈபவர். இதனை,
'பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணி களைவாய்'
'அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே'
என்னும் அமுதவாக்குகளால் இனிது உணரலாம்.

பரமசிவனைப் பாடிப் பரவுதல் எளிதில் இன்பநெறி
யினை நல்க வல்லதாகும். பன்னாள் நாம் அவரை அரற்றி
அரற்றி அழைப்போமானால், 'இவன் நம்மை அழைத்தல்
ஒழியான்' என்று, அவர் நமக்கு அவசியம் அருள்
சுரப்பார். எல்லோருக்கும் புதிய பாடல்களைப் பாடும்
சக்தி யில்லாது போயினும், தாராளமாகப் பிறபெரியார்
பாடியருளிய இன்பப் பாடல்களை எளிதிற் பாடலாம்.
நறுமணம் பொருந்திய மலர்களால் இனிய மாலைகளைத்
தொடுத்தமைக்கத் தெரியாவிடினும், பிறர்தொடுத்தமைத்
துள்ள தூயமாலைகளை எடுத்தணிவித்தலில் யாதொரு
கஷ்டமு மில்லை.

168



சிலர் தங்களுக்கு இசையின்மையால் பாடுதல் எளிய தொன்றன்று என்று இயம்புகிறார்கள். உலகிலுள்ள மக்களனைவருக்கும் இசை கைவரப்பெறுதல் இயலாத தொன்றேயாம். ஒரு சிலருக்கே இசை நலன் அமைந்திருக்கும். இசை நலன் வாய்க்கப்பெறாத ஒரு காரணத்திற்காகத் தோத்திரப் பாசுரங்களைப்பாடிப் பயன்பெறா தொழிதல் சரியாகாது. இறைவனைப் பாடுவோர்க்கு இசைநலன் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அன்னார் அன்பு ததும்ப மனமுருகப் பாடுவார்களானால் ஆண்டவன் அவர்கள் பாவிற்கு மகிழ்ந்து அருள் சுரப்பார். இதனைக் 'கோழை மிடறாக கவிகோளும் இலவாக இசை கூடும்வகையால் ஏழையடி யார்களவர் யாவை சொன சொல்மகிழுமீசன்', 'சம்பந்தன் கருது பாடல் கோழையா லழைப்பினும் கூடுவார் நீடுவா னுலகினூடே' எனும் இன்ப வாக்குகள் இனிது புலப் படுத்தும். ஆதலால் இசை நலன் உடையாரும் இலாரும், கற்றாரும் மற்றாரும் ஆடவர் பெண்டிர் அனைவரும் அன்போடு ஓதுவார்களாயின் யாவர்க்கும் இன்ப வாழ்வு எளிதில் கைகூடும்.

எனவே மிக எளியதும் அரிய பலனை அளிக்க வல்லதுமாகிய இவ்வின்பநெறியினை யாவரும் கைக் கொள்ளுவார்களாக! மனமுருக மதுர வாசகங்களை மொழிந்து மாண்பு பெறுவார்களாக.

---


## திருக்குறள் - உரைவளம் : பொருட்பால்

அறத்துப்பாலைப்போலவே உரைப்பகுதி, உரைவிளக்கப் பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி இவைகள் அடங்கியன. *M. O.* மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும். (கிரௌன் 1×4 சைஸ் 1128 பக்கங்கள்.)

**காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0.**

**தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0.**

# தெய்வத்தமிழ் வளர்க்கும் தந்தை

## தாயுமானசுவாமிகள் நினைவுப்பரிசு திருச்சிராப்பள்ளி

## முதற் பொருள் ரூ. 5000.

1. திருச்சிராப்பள்ளி மலைமீது கோவில் கொண்டிருக்கும் தாயுமானவீசன் திருவருளால் திருவருட் பெருமையை விளக்க வந்தவரும், வடநூற்கடலும், தென்றமிழ்க்கடலும், நிலை கண்டு உணர்ந்தவரும், மூவர்பாடலின் இணையற்ற தீஞ்சுவையையும் மணிமொழியாரின் திருவாசகக் கனிவையும் நுகர்ந்தவரும், திருச்சியிலுள்ள தருமையாதீன மௌனமடத்திலே எழுந்தருளி யிருந்த மௌனகுரு என்னும் சிவயோகியாரிடம் ஞானயோக முறைகள் கைவரப்பெற்றவரும், 1627-1654-ல் ஆட்சிபுரிந்த விஜயரெங்கசொக்கநாதநாயக்கர் எனும் மன்னவரிடம் அரசாங்க அலுவலராயிருந்தவரும், மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினவரும், தெளிபளிங்கன்ன துயஉள்ளம்- தாழ்வெனும் தன்மை - வீடுபேற்றின்கண் பேரவாப்பெருக்கு, பதார்த்தங்கள் பாராது பரமே பார்க்கும் பெருநோக்கு - புனிதப் புனற்பெரு வெள்ளம் போன்ற சொல்லாற்றல் ஆகிய பண்புகளையுடைய வரும், கன்னலமுதெனவும் கனியெனவும் வாயூறு கண்டெனவும் புகலத்தகும் தண்டமிழலங்கல் பலதொடுத்தவருமாகிய தாயு மான அடிகளாரை நினைவு கூர்ந்து உய்தற்பொருட்டும் அவர்தம் பாடல்களைப் பயின்று அவற்றுள் வகுக்கப்பெற்ற தூய நெறியை மாணவர்கடைப்பிடித்தொழுகுதற்பொருட்டும்திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது 'ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு' என வழங்கப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000/- (ரூபாய் ஐயாயிரம்) இத்தொகை நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு $3\frac{1}{2}$ வீதம் வட்டி தரக்கூடிய பத்தாண்டுக் கருவூலச் சேம வைப்புத்தாள் (டிரஷரி சேவிங்ஸ் சர்டிபிகேட்) களில் முதலீடு செய்யப்பெறும். இது திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

170

3. இம் முதற் பொருளினின்றும் ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி ரூ. 175/- இவ்வட்டித் தொகையினின்று (ரூ. 50, 40, 30) என ரூபாய் 120/ பரிசாக அளிக்கவும், எஞ்சிய தொகையில் ரூ. 20/- (ரூபாய் இருபது) தேர்வு நடத்துதல், பரிசளிப்பு விழா ஆகியவற்றுக்குரிய செலவுக்கெனவும், பயன் படுத்தப்பெறும். மீதி மூலதனத்தோடு சேர்க்கப்பெறும்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன:-

அ. திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக்கல்விக்கூடங்களில் 5, 6 அமைவு (பாரம்) களில் படிக்கும் ஆண் பெண் இருபாலார்க்கும் (சாதி, மத, குல) வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

ஆ. பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் தாயுமானசுவாமிகள் அருளிச்செய்த பாடற்றிரட்டில் கீழ்க்குறித்துள்ளவாறு 84 (எண்பத்துநான்கு) பாடல்களை மனப்பாடஞ் செய்து (சொற் பொருள் விளங்கும் வண்ணம்) ஒப்புவிக்கவேண்டும். வாய் மொழியாகக் கேட்கும் வினாக்களுக்கும் விடையிறுத்தல் வேண்டும்.

| தேர்வுப்பாடற்குறிப்பு | | பாடல்கள் |
|---|---|---|
| க. | பராபரக்கண்ணி (தொடர்ந்து எவையேனும்) கண்ணிகள் | 10 |
| உ. | பைங்கிளிக்கண்ணி ஷ | 10 |
| ங. | எந்நாட்கண்ணியில் அடியார் வணக்கம் | 9 |
| ச. | காண்பேனோவென்கண்ணி (தொடர்ந்து எவையேனும்) கண்ணிகள் | 10 |
| ரு. | (ஆகாதோ, இல்லையோ, வேண்டாவோ, நல்லறிவே, பலவகை என்னும் கண்ணிகள், ஆனந்தக்களிப்பு வண்ணம் என்பவை நீங்கலாக) மற்றத் தலைப்புக்கள் 45-ல் ஒவ்வொரு தலைப்புக்கு ஒரு பாடல் வீதம் | 45 |
| | ஆகப் பாடல்கள் | 84 |

இ. இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். திருச்சிராப்பள்ளி நகர ஆட்சி

(7)

மன்றத்தலைவரும் (சேர்மென், முனிசிபல் கவுன்சில்) திருச்சி நகர ஆட்சி ஆணையரும் (கமிஷனர் திருச்சி முனிசிபாலிடி) பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக்கல்விக் கூடத்துத் தலைமையாசிரியர், அல்லது அவர்களால் அனுப்பப் பெறும் தமிழாசிரியர்களும், இத்தேர்வுக் குழுவின் உறுப்பினராவர். திருச்சி மௌன மடத்துக் கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும் இத்தேர்வுக் குழுவில் ஒருவராக ஏற்றுக்கொள்ளவேண்டும். திருச்சி நகர ஆட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக்குழுவின் தலைவரும் ஆவர்.

ஈ. பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம் விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர்வழியாக ஆண்டு தோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் திருச்சி நகர ஆட்சி ஆணையருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக்குழுத் தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

உ. பரிசுத் தேர்வில் முதற்கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 50/- (ரூபாய் ஐம்பதும்), இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ 40/- (ரூபாய் நாற்பதும்), மூன்றாவது கூறு பெற்றவர்க்கு மூன்றாவது பரிசு ரூ. 30/-ம் (ரூபாய் முப்பதும்) ஆக மூன்று பரிசுகள் அளிக்கப்பெறும்.

ஊ. இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற்பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வவர் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய நான்கு பேரை மேல் (ஆ) பிரிவில் குறித்தவாறு நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக்கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

எ. ஒருமுறை பரிசுபெற்றவர் மறுமுறை பரிசுபெறற்கு உரியரல்லர்.

5. இப்பரிசுகள் ஜனவரிமாதம் (அதாவது) தைத்திங்களில் விசாக விண்மீன்கூடிய, தாயுமானவ அடிகளார் நினைவு நாளில் திருச்சி தாயுமான சுவாமி திருக்கோயில் நூற்றுக்கால்

மண்டபத்திலோ அல்லது நகர மன்றத்து உறுப்பினர் கூடும் மண்டபத்திலோ (முனிசிபல் கவுன்சில் ஹால்) பரிசளிப்புக்கெனக்கூட்டிய ஒரு பொதுக்கூட்டத்தில் அளிக்கப்பெறும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், பரிசு அளிப்புக்கூட்டம் நடத்துதல் ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவேயிருத்தல் வேண்டும், வட்டிவரவுக் கேற்றவாறு பரிசுத்தொகைகளைக் குறைக்கவும் கூட்டவும் கூடும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றதும் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக்கணக்கையும் பரிசுத் தொகை, பரிசு பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சக்கத்துக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்களுக்கும், அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பி வரவேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடின் அந்த ஆண்டுக்குரிய பரிசுத்தொகை ரூ. 120 (ரூபாய் நூற்றிருபதும்) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத்தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறுதல் வேண்டும். ஷை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துத்தலைவர் அவர்கள் அத்தொகையைக்கொண்டு ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள குமரகுருபரன் கலைக்கோவில் நூல்நிலையத்திற்குத் தமிழ்நூல்கள் வாங்கி நூல்நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்க்குப்பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

---

Registered at Tiruvadamarudhur Sub Registrar's Office on 22-2-1952 as No. 15 of 1952.

## Sri Thayumanaswami Sanmarga Sangam Library Fund, Ramanathapuram Rs. 5,000.

Trust deed executed by Rajakumar Sri R. KASINATHA DURAI Avl., President, Thayumanaswami Sanmarga Sangam, Ramanathapuram.

1. On the representation of the Managing Committee of the Sri Thayumanaswami Sanmarga Sangam, Ramanathapuram, His Holiness Srilasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl., of Tirupanandal was pleased to donate a sum of Rs. 5000 (five thousand only) for the benefit and improvement of the Library attached to the Sangam and handed over the amount to me as President of the Sangam.

2. As agreed upon between me and the Donor at the time of grant I, Rajakumar Sri KASINATHA DURAI Avl., President of the Thayumanaswami Sanmarga Sangam, Ramanathapuram execute the Trust deed in respect of the sum of Rs. 5000.

3. The Trust fund shall be styled as Sri Thayumanaswami Sanmarga Sangam Library fund.

4. The capital of the Trust amount consists of Rs. 5000 - in 3½% Ten year Treasury Savings Certificate No. Ms. 003884 purchased with the amount donated by His Holines Srilasri Kasivasi Arulnanadi Tambiran Swamigal Avergal.

5. The interest accruing on the capital fund shall be utilised for the purchase of books required for the Library located at the Thayumanaswami Mantapam at Ramanathapuram.

6. The administration of the fund shall be vested in the Managing Committee of Sri Thayumanaswami Sanmarga Sangam.

7. The income from the fund shall not be diverted to any other purpose except that of purchasing books for the said library. The Managing Committee shall render to the Donor an annual account of receipt of Expenditure with a list of books purchased and their cost.

---

Registered at Ramanathapuram Registrar's Office on 13—2—1952 as No. 3 of 1952 Book No. 4 Volume No. 39 Pages 132—133.

174

# சொற்பொழிவு

சென்னை முன்னாள்மேயர், உயர்திரு. S. இராமசாமி நாயுடு அவர்கள் மாயூரம் நகராண்மைக் கழகத்தில் 18—2—52 மாலை தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்த போது பேசியது.

நகராட்சி மன்றத் தலைவர் அவர்களே! நகரமன்ற நண்பர்களே! மாயூரநகரப் பெருமக்களே!

இந்த நகரசபையார் என்பால் அன்புகாட்டி, இந்த நல்ல பணியை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புத்தந்த பெருமையினைக்குறித்து மட்டில்லாமகிழ்ச்சி கொள்கின்றேன். முதற்கடமையாக எனது நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன். 'சோழவளநாடு சோறுடைத்து' என்பது ஆன்றோர்வாக்கு. 'தொண்டைநாடு சான்றோர் உடைத்து' என்றும் சொல்வார்கள். 'இன்று நாம் குறிப்பாகப்பார்க்கும்பொழுது சோழநாடு எல்லாம் உடைத்து' என்றுதான் நான் சொல்வது வழக்கம். இதற்குகந்தவாறு இந்தத்தஞ்சைமாவட்டத்திலே எல்லா வளங்களும் ஒருங்கே நிகழப்பெற்ற ஒரு நல்லநிலையைக் காண்கின்றோம். அந்தவகையில்தான் சமயத்துறைத் தலைவர்களும் பெருவாரியாக இருக்கின்றார்கள் என்று பெருமிதத்துடன் கூறினால் அதுஒருக்காலும் மிகையாகாது. ஆசாரியசுவாமிகளுடைய மடமும், மற்றைய சைவப்பெருமடங்களும் இத்தஞ்சை மாவட்டத்தில்தான் இருக்கின்றன என்று சொல்லிக்கொள்வதில் தஞ்சை மாவட்டத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தமக்கு அத்தகைய பெரும்பேறு கிடைத்ததைக் குறித்துப் பெருமகிழ்வு கொள்ள வழியுண்டு. இதை நினைத்து அவர்கள் இறுமாப்புக்கொள்ளுதல் சாலவும் பொருத்த முடைத்து. அந்த அளவிலே மாயூரத்தைச்சேர்ந்த தருமபுரத்தில் நல்ல சமயத்துறைத்தலைவர்களைக் காணும்படியான ஒருபேறு கிடைத்திருக்கிறது என்று சொன்னால்

அது இந்தமாயூரநகரப்பெருமக்களுடைய புண்ணியமேயாகும். கடந்த 400 ஆண்டுகளுக்குமுன் தொடங்கியே இந்த ஆதீனத்தைத் தருமபுரத்தில் நிறுவி, பலநல்ல காரியங்களையெல்லாம் செய்து வந்திருக்கின்றார்கள். அவர்கள் செய்துவந்த செம்மையான – செழுமையான சேவைகளைப் பலவிதமான வரலாறுகள் மூலமாக நாம் படித்திருக்கின்றோம். இன்று நாம் கண்கூடாகக்காணக் கூடிய இந்தத் தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எவ்வளவு அழகுடனும், பெருமையுடனும், ஒழுங்குடனும் நல்லபணிகளை நம்மவர்க்குச் செய்துதந்து அந்த இன்பம் ஒன்றிலேயே தாமும் திளைத்து நிற்கின்றார்கள் என்பதை நான் சொல்லாமலே இங்குக் கூடியிருக்கின்ற பெருமக்களாகிய நீங்கள் அறிந்து கொள்வீர்கள். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது அப்பர் வாக்கு. அதற்கு இணங்க அவர்கள் தமக்குக்கிடைத்த அறிவுச் செல்வத்தை – பொருட் செல்வத்தை – பெருஞ்செல்வத்தையெல்லாம் வாரிவாரி வழங்கி வருகின்றார்கள். கைப்பொருள் ஒன்றே பெரிது என்று கொள்ளாது மெய்ப்பொருளில் தாமும் திளைத்து நிற்கின்றார்கள் என்பதை நான் சொல்லாமலே இங்குக் கூடியிருக்கிற பெருமக்களாகிய நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

மற்றும் அவர்களுக்குக்கிடைத்த அறிவுச்செல்வத்தை எவ்வாறு பகிர்ந்து கொடுக்கிறார்கள் என்று பார்ப்போமானால் பல நூல்களையெல்லாம் வெளியிட்டு நமக்குக் கொடுத்திருக்கின்றார்கள். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்று கூறும் பெருமை படைத்த திருவாசகத்தை அவர்கள் பதிப்பித்திருக்கிறார்கள். மணிவாசகருடைய திருவாசகத்தை எல்லோரும் நன்றாகப் படித்து உணர்ந்து உய்தல்வேண்டும் என்ற எண்ணத்திலே அந்நூலை நல்ல முறையிலே பதிப்பித்து அதற்குப் பொருளும் அதனுடன்தந்து

எல்லோரும் படித்தின்புறுமாறு செய்திருக்கின்றார்கள். இதைப்போலவே குறளுக்குப் பலவிதமான ஆசிரியர்களுடைய உரைகளையெல்லாம் கொண்டு இன்று உள்ள நிலைமைக்கு ஏற்றவகையிலே, பல ஆசிரியர்களுடைய நூலையும், கருத்துக்களையும் நன்றாக எடுத்துக்காட்டி அறத்துப்பாலையும், பொருட்பாலையும் வெளியிட்டிருக்கின்றார்கள். காமத்துப்பாலையும் வெளியிடுவதற்கு அவர்கள் செய்துவரும் முயற்சி முடியு நிலையிலிருக்கிறது. திருக்குறள் எல்லாச் சமயத்தாராலும் போற்றப்படும் நூல். அதனை அறிவுடைப்பெருமக்கள் யாவரும் ஓதி உணர்தல்வேண்டுமென்ற நல்ல எண்ணத்தினாலே வெளியிட்டிருக்கிறார்கள். திருக்குறளை எல்லோரும் தத்தம் மறையாகக் கொண்டு தங்களுடைய பேச்சுக்களிலும் இன்னும் பல காரியங்களிலும் எடுத்துக்காட்டாக சொல்லிவருகிறார்கள். இப் பெருநூலை மக்கள்யாவரும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தினாலே-அறிவுடைப் பெருமக்கள்மட்டுமின்றி என்போன்ற அறிவுநிரம்பப் பெறுதவர்களும் பெற்றுப் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தினாலே பொருளை நல்லவழியிலேநல்கி செய்து தந்த இச்சிறப்பினை நாம் ஒருநாளும் மறக்கமுடியாது.

இந்தவிதமாக நல்ல தமிழ்நூல்களோடுமட்டுமல்ல: சைவசித்தாந்தநூல்களையெல்லாம் ஆங்கிலத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். அதனை, ஆங்கிலத்திலே வல்லுநர்களாக இருக்கும் அறிவுடைப்பெருமக்களெல்லாம் படித்துணர்ந்து பாராட்டியிருக்கின்றார்கள். சித்தாந்தத்தை-அதன் சிறப்பியல்புகளைப் படித்து இன்புறுவதற்கு ஏற்றமுறையிலே வெளியிட்டிருக்கின்றார்கள். இதைப் போல இன்னும் எவ்வளவோ நூல்களை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். வெளியிட்டும் வருகின்றார்கள்.

இப்படிப் பல நல்லகாரியங்களைச் செய்துவரும் அவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும். அதற்கு ஏற்ற முறையிலே இந்த நகராண்மைக்கழக நண்பர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மரியாதைகாட்டவேண்டும்;

தங்களுடைய அன்பினை வெளிப்படுத்தவேண்டும் என்பதற்காகத் திருஉருவப்படங்களைத்திறந்துவைத்து அதன் வாயிலாக நன்றிசெலுத்தவேண்டும் என்று நினைத்தது போற்றுதற்குரியது. ஆனால் எந்த நகராண்மைக்கழகமும் எனக்குத் தெரிந்த அளவிலே இம்மாதிரி சமயத் துறைத்தலைவர்களின் படங்களைத் திறந்ததில்லை. இப்பொழுதுதான் முதன்முதலாக உள்ளது என்பதைத் தெரிவித்துப் பாராட்ட விரும்புகிறேன். வேறு எந்த நகராண்மைக்கழகமும் இந்த அளவிலே செய்வதற்கு முன்வரவில்லை. ஆனால் தமிழ்நாட்டிற்குத் தனிச்சிறப்பு உண்டு என்பதை நான் அறிவேன். தமிழுக்கு இருப்பிடமாகவும், தமிழ்க் களஞ்சியமாகவும் உள்ள இந்தத் தஞ்சை மாவட்டத்திலே எல்லோரும் கேட்டு, படித்து உணர்ந்து .உய்தல் வேண்டும் என்ற எண்ணத்தையும் பெருமையையும் இந்த நகராண்மைக்கழக நண்பர்கள் நன்ருக அறிந்து இருக்கிருர்கள். உதாரணமாகப் பார்க்கக்கூடிய அளவிலே அரசியல்ஞானியர்களின் படங்கள் எங்கும் அலங்கரிப்பது உண்டு. அரசியலையும் சமயத்தையும் ஒன்ருகச்சேர்த்து இணைத்துப்பிணைத்துத் தந்த எம்மான் காந்தியடிகளாரின் படத்தையும் நாம் காண்கின்ரேம். இந்த நகராண்மைக்கழக நண்பர்கள் நல்லறிவுபடைத்தவர்கள்; தமிழ்ப்பற்று மிகுந்தவர்கள். எடுத்துக்காட்டாக அவர்கள் இன்று இரண்டு பெரிய மகா சந்நிதானங்களுடைய திருவுருவப்படங்களைத் திறந்துவைக்கிருர்கள்.

இந்த நகராண்மைக் கழகத்து நண்பர்களைக் குறிப்பிடும்போது நாயன்மார்களின் ஞாபகம்வருகிறது. நாயன்மார்களை நான் நகராண்மைக்கழக உறுப்பினர் என்று கூறுவது வழக்கம். ஏனெனில் அவர்கள் அன்று செய்த வேலையைத்தான் இன்று நகராண்மைக் கழக நண்பர்கள் செய்து வருகிருர்கள். நாயன்மார்கள் உழவாரத்தொண்டு என்று சிறப்பாகச் செய்துவந்திருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்

படுகிறேன். உழவாரத்தொண்டு என்றால் தமிழ் படித்தவர்கள் உடனே புரிந்துகொள்ளலாம். மற்றையோர் உழவாரத் தொண்டு என்று சொன்னால் ஏதோ ஓர் தொண்டு என்றுதான் கொள்ளுவார்கள். அன்று கோவில்கள் எல்லாம் அறிவுக் கோவில்களாகத் திகழ்ந்தது. அன்று கண்ட பெருமையெல்லாம் புனிதமானது. கோவிலுக்குள்ளே செல்லும் பக்தர்கள் அறிவுடைப்பெருமக்களாகச்சென்றார்கள். கோபுரங்கள் எல்லாம் கலையின் பெருமையையும், பல நுட்பங்களையும் நன்றாக அறிவிக்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்கின; இன்றும் இருக்கின்றன. ஆனால் அன்றுகண்ட காட்சி வேறு; இன்று காணும் காட்சி வேறு. கோவிலுக்கு வழிபாட்டிற்காகப் போகின்றவர்கள் கோபுரங்களைக் கண்டமாத்திரத்திலே கலையின் உயர்வை, உயர்வின் எல்லையைப் பார்க்க உயர்ந்து நிற்பார்கள். அந்த எழில் மிகுந்த காட்சியை நன்றாக உணர்ந்து ஈடுபட்ட அவர்கள் மனம் கலையைக்காணும் நாட்டத்தால் எங்கும் பரவி நிற்கும். அதற்கும் அடுத்தாற்போல் எழில்மிகுந்த இளநங்கையர் நாட்டியக்கலையில் ஈடுபட்டு நர்த்தனம் செய்துகொண்டிருப்பார்கள். அவர்களுடைய கலை பாராட்டக்கூடியதாயும் இருக்கும். ஆனால் அவர்கள் நமக்கு அறிவிக்கும் அறிவிப்பு வேறு. நீங்கள் காண வேண்டியது கலை அழகேயன்றி உடலழகு அன்று; வினையின் வந்தது வினைக்கு விளைவாயது புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது; இதனைக்கண்டுமயங்காதீர்கள் என்று அறிவுறுத்துவார்கள். அந்த வகையில் வழிபடுதல் வேண்டுமேயன்றி மற்ற ஒன்றையும் அவர்கள் கருதவேகூடாது.

அடுத்தாற்போல நாயன்மார்கள் தங்களது பக்தி ஞானம் நிறைந்த பக்திரசப்பாடல்களை இசைத்திருப்பார்கள். அந்த இசையின் ஆனந்தம் எங்கும் நிறைந்திருக்கும். அதற்கும் அப்பால் சென்றால் ஓர் உன்னதமான சிறந்த சிலையைக் கண்டு பூசித்துக்கொண்டு

இருப்பார்கள். இந்நிலை இருந்தது அன்று கோவில் களிலே. இந்தக்கோவில்களை எல்லாம் கண்டு வணங்கி வாழ்ந்த மக்களுக்குத் தொண்டேசெய்யவேண்டும் என்ற எண்ணத்தினாலே அங்கே முளைத்திருக்கக் கூடிய புல்பூண்டுகளை அகற்றித் தொண்டு செய்து வந்தார்கள். இத்தகைய சிறப்பினை நாயன்மார்கள் அன்று செய்தார்கள். அந்த அளவிலே இன்று நாம் செய் கிறோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த வழிவழிவந்த சைவசமயத்துறைத்தலைவர்கள் செய்த நற்பணிகளைக்கொண்டாடும் வகையிலாவது நகராட்சி மன்றத்தில் அவர்கள் திருவுருவப் படங்களை நிறுவ வேண்டும் என்று செய்தமுடிவு மிகவும் போற்றுதற்கு உரியது. உங்களை நான் பாராட்டுகிறேன். 15 லட்சம் 17 லட்சம் மக்கள் வாழும் சிறந்த பெரிய இடங்களிலும் சமயத்துறைத்தலைவர்கள் படத்தைத் திறந்துவைக்கும் பேறு பெறவில்லை என்பதை இங்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதோடு நீங்கள் அந்தப்பெருமை யைப்பெற்றுவிட்டீர்கள் என்பதை நினைந்து உங்க ளிடத்தில் பொறாமையே ஏற்படுகிறது. இதன் மூலம் நீங்கள் எல்லாம் நல்லறிஞர்கள் என்பதை எடுத்துக் காட்டிவிட்டீர்கள். இன்று சமயத்துறைத்தலைவர்கள் செய்துவரும் சேவையை நீங்கள் சென்று பார்க்க வேண்டும்; அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்று தருமபுர ஆதீனத்தின்கீழ் நடத்தப்படும் கோயில்களைச் சென்று பார்ப்போமானால் சம்பிரதா யப்பிரகாரம் தமிழ் வழக்காறு கொண்டு அந்தமுறை யிலே வழிபாடுகள் நடத்தவேண்டும் என்பதையெல்லாம் நன்றாக அறிந்து, அதன்படி மற்றவர்கள் நடத்த வேண்டும் என்று அறிவிப்பதற்கேற்ற நிலையங்களாக அவைகள் விளங்குகின்றன என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். எனது நண்பர் சிவானந்தம் அவர்கள் 24-வது மகாசந்நிதானமவர்கள்

தொடர்பு எந்தவகையில் ஏற்பட்டதென்பதை உங்களிடையே சொன்னார்கள். அவர்களிடத்தில் மிகுந்த பற்றுக்கொண்டவர்கள்; அவர்களை நன்றாக உணர்ந்தவர்கள். நீங்கள் தந்த பெருமைக்காக வழக்காறு கொண்டு அவர்கள் இப்பொழுது பேசவில்லை. அவர்களுடைய பெயரைப்பாருங்கள்! சிவானந்தம். எவ்வளவு அழகானபெயர். இந்தப்பெயர் எத்தனை முறைவேண்டுமானாலும் சொல்லக்கூடியதாக இருக்கிறது. இந்தப் பெயருக்கு ஏற்பச் சிறப்பியல்புகள் அவர்களிடத்தில் அமைந்திருக்கின்றன. இன்னும் அவர்கள் கழுத்தில் ஜபமாலை சிறந்தமுறையில்தான் விளங்குகிறது. அவர்கள் 24-வது மகாசந்நிதானமவர்கள் படத்தைத் திறந்து வைத்தது சாலவும் பொருத்தமுடைத்து. அத்தகைய காரியத்தைச் செய்ய அவர்கள் ஏற்றவர்கள். ஆகையினாலே அவர்களுக்கு அந்தப்பெருமையானகாரியத்தை அளித்தீர்கள். ஆனால் ஏதோ எனக்கும் அத்தகைய வாய்ப்பை இன்று நீங்கள் அளித்திருக்கின்றீர்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைச் சில ஆண்டுகளாகத்தான் நெருங்கிய தொடர்புகொண்டு அறிந்துகொண்டவன். அந்தமுறையிலே அவர்கள் எத்தகைய எண்ணத்திலே இருக்கிறார்கள் என்று நான் சிந்தித்தபொழுது எல்லோரும் உய்யும்பொருட்டு, சமயதத்துவங்களைப் பேசி வருகிறார்கள். சமய உண்மைகளைச் சொல்லும்பொழுது உலகில் பலவிதமான தத்துவங்கள் இருக்கலாம். அதற்குப் பலவகையான முறைகள் இருக்கலாம். ஆனால் அன்பனே! நீ உணரவேண்டியது ஒன்று உண்டு. ஒரு நதி இருக்கிறது. அது பல கணவாயோடு ஓடுகின்றது. பல திசைகளை நோக்கிச் செல்கின்றது. மலைகளின் உன்னதச்சுனைகளிலிருந்து அருவிகள் கொட்டுகின்றன. இந்தவிதமாகப் பாய்ந்துசெல்கின்ற நதியில் இருப்பது நீர்தானே. அதுபோல் சமயத்துறைத் தலைவர்கள் பல விதமான சமயங்களை அமைத்தாலும், பலவிதமான

முறைகளை வகுத்திருந்தாலும் அவைகளில் காண்பது எல்லாம் கடவுள் ஒன்றுதான். அன்பனே! இதைத்தான் நீ உணரவேண்டும். இந்தத் தத்துவத்தைத்தான் நீ அதில் காணுவாய். இதைத்தான் காணவேண்டும். மாற்றமே காணவேண்டியதில்லை என்றெல்லாம் மக்கள் சூழ்நிலைக்கேற்றவாறு முறைகளை அமைத்துக்கொள்ளுவார்கள். கடமைகளை நிறைவேற்றுவார்கள். அவைகளில் எல்லாம் பேதம்காட்டாமல் காலத்தை நன்றாக உணர்ந்து மக்களிடையே தொடர்புகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் இன்று பண்டைக்காலத்துப் பழக்கவழக்கங்களையெல்லாம் படிப்படியாகக்குறைத்துக் கொண்டு காலத்திற்கேற்றவாறு மாற்றி இன்று தாமே மோட்டார்காரில் செல்லவும், விமானங்களில் செல்லவும், பல இடங்களையும் கண்டு பிறருக்குச் சொல்லவும் வேண்டும் என்றகாரணத்தினால் இப்படி மாற்றி அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு திருமடத்திற்கும் பிறிதொரு திருமடத்திற்கும் இடையில் பகைமூட்டிப் பலனைப்பெறும் மக்களின் நிலைமையை அறவேஒழித்து, ஒருமடத்துத் தலைவர்பால் பிறிதொரு பெரியமடத்துத் தலைவர் தாமாகவந்து கண்டு களித்து அளவளாவுதலே சிறந்தவழி என்பதை அவர்கள் காட்டிவருகிறார்கள். இப்படியாகத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தரவர்களும் தருமபுர ஆதீனகர்த்தரவர்களும், இரண்டு நண்பர்கள் ஒருவரை ஒருவர் எப்படிப் பார்த்துப்பேச விரும்புவார்களோ அந்தவிதமாக வந்து கண்டு அளவளாவும் நிலையில் அவர்கள் மாற்றியமைத்திருக்கிறார்கள். அந்த வகையிலும் மக்கள் கருத்துக்கிசைந்தவாறு, காலத்திற்கேற்றவாறு தங்களுடைய அறிவுரைகளை நிகழ்த்த வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து செய்து வருகிறார்கள். தற்காப்புக்காகப் பல கோட்டைகளை அன்று மனிதன் அமைத்துக் கொண்டான்; ஆனால் இன்றையநிலைக்கு ஏற்றதல்ல என்று அவைகளையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டார்கள். காலத்திற்கு ஏற்றவாறு நடப்பதே முறை. காலத்துக் கேற்ற

182



வகையிலே மக்களுக்கு நல்லபணிகளைச் செய்து கொடுத்து அவர்கள் இன்பத்திலும், நன்மையிலுந்தான் கடவுள் தன்மையைக் காணமுடியும் என்றும் நான் அவர்களைக்கண்டு பேசியபொழுது சொன்னார்கள்.

மற்றொன்று, அவர்கள் அரசியல் ஞானிகளிடத்துப் பற்று உள்ளவர்கள். காந்தியடிகளிடத்திலே அவர்களுக்குப் பெருமிதமான அன்பு உண்டு. தமிழ்க்கழகத்தின் சார்பில் காந்தியடிகளின் கதையை வெளியிட வேண்டும்; அக்கதையை மக்கள் அனைவரும் கேட்க வேண்டும்; அதனை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்; அன்புநெறியை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று சொன்னார்கள். ஏனென்றால் மெய்ப்பொருள் நாயனார் கதையையும், காந்தியடிகளின் கதையையும் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது மெய்ப்பொருள் நாயனார் காட்டிய வழியிலேயே காந்தியடிகள் சென்று இருக்கிறார்கள். மெய்ப்பொருள் நாயனார் நிலையை அவர்கள் ஒப்பிட்டுக்கூறினார்கள்.

அரசியல்துறையைப்பற்றிப் பேசும்நிலை வந்த பொழுது மிகமிக விரும்பி அவர்கள் பேசினார்கள். அந்தநிலையிலே அவர்களிடத்திலே தனித்துப் பேசும்படியான பேறு பெற்றேன்.

நம்முடைய அறிவுடைப் பெருமக்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? நாட்டுக்குகந்த அரசாங்கத்தை அமைக்கவேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது தானே. காந்தியடிகளின் வாரிசாகிய நேருஜிக்கு உகந்தவாறு உடனிருந்து அமைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறதல்லவா? ஆகையால் உங்களைப்போன்ற தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஏன் அதற்கு வழிவகைகளைக் காணமுடியாது? என்று கேட்டார்கள். நான் சொன்னேன் எங்களுக்குத் தலைவர்களாக இருக்கின்றவர்களிடத்திலே பூசல்கள் இருக்கின்றன; அவைகள் எல்லாம் மறைந்து

விட்டால் நல்ல பலனைக் காணலாம்; இந்தக் காரணத்தால் தான் அறிவுடைப் பெருமக்கள் எல்லாம் வாய் திறவாது இருக்கின்றார்கள்; இந்தப் பூசல்கள் எல்லாம் மறைந்து, அவர்களும் வாய்திறந்து பேசுவார்களாயின் ஊமையராய், செவிடராய் இருக்கும் என்போன்றவர்களெல்லாம் செயலில் இறங்கித் தொண்டுகளைச்செய்ய முடியும் என்று. இதை எல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் இந்நாட்டு அரசாங்கம் நல்ல முறையிலே, நல்ல நெறியிலே அமையவேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே இத்தகைய பல நல்ல கருத்துக்களையெல்லாம் திருவுள்ளம்கொண்டுள்ளார்கள் இதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்கே. இவ்விதமாக அவர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம். இவைகள் எல்லாம் அவர்களுக்குப் பெருமை தரவேண்டும் என்பதற்காகச் சொல்லியது அல்ல. உண்மையிலேயே நான் கண்டதைச் சொன்னேன். அவர்களுடைய ஆட்சியின் முறைகளை எல்லாம் நான் நன்றாக உணர்ந்திருக்கின்றேன். அதனால்தான் இவ்வளவு பெருமிதமாகச் சொல்லுகிறேன். நல்ல அறப்பணிகளைச் செய்துவருகிறார்கள். அவர்கள் திருவுருவப்படத்தை இங்கு திறந்துவைப்பதன் நோக்கம், இந்தப் படங்களை இங்கு பார்த்த மாத்திரத்தில் எதற்காக இந்தப் படங்களை இங்கே அமைத்திருக்கிறார்கள் என்று ஒருவர் சிந்திக்கின்ற நேரத்திலே அவர்களுடைய அறப் பணிகள் நினைவிற்கு வரும். பெரும்பணம் படைத்தவர்கட்கும், இந்தப் படங்களைப் பார்க்கின்றபொழுது அவர்களுடைய அறப்பணிகள் நினைவுக்கு வரும். நாமும் அவர்களைப்பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காக இது அமைந்துளதா என்று அவர்களுக்குத் தோன்றும். அப்படிப்பட்ட நிலையை உண்டாக்கும். 24-வது மகாசந்நிதானமவர்கள் மருத்துவ விடுதிக்கு அஸ்திவாரம் போட்டாலும் இங்கு மருத்துவ விடுதியை இரண்டரை லட்சரூபாய் செலவிலே இன்று அருளாட்சி நடத்தும் சுவாமிகள் கட்டிக்கொடுத்திருக்

கின்றார்கள். இவ்விதமாக இந்தத் தொகுதியில் மட்டு மல்ல, சென்னை ராஜ்யத்திலுள்ள பல தொகுதிகளிலும் பலவிதமாக நன்கொடைகள் வழங்கிவருகிறார்கள். பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவர் களுடைய படத்தைத் திறந்து வைக்கும் பணியை நிறைவேற்றுதற்கு வாய்ப்புத்தந்த - நகராண்மைக் கழக நண்பர்களும் நீங்களும் சேர்ந்து தந்த பெருமைக்கு மீண்டும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## நூல்களைப்பற்றிய கருத்துரைகள்

கரஹூ தைமீ 20உ திருவாவடுதுறை ஆதீனத்து ஆதி நமசிவாயமூர்த்திகள் குருபூஜை விழா மிகச்சிறப்பாக நடை பெற்றது. 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சி ஏற்றுக்கொண்ட முதலாண்டு இது. இந்தச் சிலமாதங்களுக்குள் செந்தமிழ்க்கும் சைவத்துக்குமாக வெளியிட்ட நூல்கள் ஐந்து. ஐந்தும் மிகச் சிறந்த செந்தமிழ்ச் சைவ நூல்கள். பஞ்சாக்கர தேசிகர் குருபூஜை விழாவோடு ஐந்து நூல்கள் நிறைவேறியது திருவருள் நிறைவைக்காட்டும் அடையாளமாகும். குருபூஜை விழாவில் வெளிவந்த நூல்கள் மூன்று. அவை நமச்சிவாயமூர்த்தியாற்றுப் படை, உலகத்தோற்றம் சைவப்பேரரசு என்பன.

**ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை:-** இது ஒரு புதிய எடுப்பாகும். நமச்சிவாயமூர்த்திகளது திருவருளுபதேசம்பெற்ற பரிபக்குவ ஆன்மா, பரிபாகம் பெற இருக்கின்ற மற்றொரு ஆன்மாவுக்கு வழிகாட்டுவதாக அமைந்தது. இதுவே ஞான மூர்த்திகள்பால் ஆற்றுப்படுப்பதன் அடிப்படையான நோக்கம். திருமுருகாற்றுப் படையை ஒட்டியே ஆறு படைவீடுகளாக அமைந்து இவ்வாற்றுப்படையும் செல்கின்றது. ஞான குரு மூர்த்திகள் ஆணவம் கன்மம் மாயையாகிற முப்புரங்களையும்

185

ளரிப்பதற்காகவே கண்ணுதலும் கண்டக்கறையும் மறைத்து அருட்கண் கொண்டு ஆசான் மூர்த்தமாக எழுந்தருளிய பாசமறை நிலையை அறிவிப்பது. திருவாவடுதுறைஆதீன வரலாறு முழுவதும் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டுவது. சிறந்த பல சிற்பங்களும், திருப்பெருந்துறை திருவிடைமருதூர் முதலிய சிவாலயங்களின் தோற்றமும் அழகிய படங்களாக அமைக்கப் பட்டுள்ளன. எல்லா வகையினும் இப்பதிப்பு சிறந்து விளங்குகிறது. இதனுல் இதன் ஆசிரியராகிய வித்துவான் ஸ்ரீ தே. ஆ. ஸ்ரீநிவாசாசாரியார் அவர்களுடைய அறிவின் பொலிவும், வாக்கு வளமும் நன்கு அறியக்கிடக்கின்றன. வித்துவான் திரு. T. S. தியாகராஜ தேசிகர் அவர்கள் இந்நூலை நன்கு ஆராய்ந்து நூலின் அழகு முழுவதையும் எடுத்துக்காட்டும் அழகிய மதிப்புரை ஒன்றும் வழங்கியுள்ளார்கள். ஆதீன வித்துவானின் சிறப்புப்பாயிரமும் அழகு செய்கின்றது.

உலகத் தோற்றம்:- இந்நூல் சித்தாந்தக் கருத்துக்களை எளிய இனிய தமிழ் நடையில் வினவும் விடையுமாக விளக்கிச் செல்கிறது. சைவசித்தாந்தக்கருவூலத்து இலக்கணவிளக்கினைக் கொண்டு இலக்கியத் துணைகளோடு திருவருள் விலாஸத்தினுலே அடையத்தக்க சைவசித்தாந்த நுணுக்கங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகிறது. ஒரும் வேதாந்தத்து உச்சியிற் பழுத்த ஆரா இன்பத்து அருங்கனிபிழிந்த சாரமாகிய சைவசித்தாந்தத் தேனை அருந்துவார்க்கு இது மிகப்பயன்படும். எழுதியவர்கள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களில் ஒருவராகிய ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். இவர்களுடைய சைவத்தமிழ்ப்பணியை உலகம் அவ்வப்போது அறிந்து மகிழ்ந்து வருகிறது.

சைவப் பேராசு:- சைவசித்தாந்தமரபு நீடூழி தழையத் தழைத்து வருவன சைவ மடாலயங்கள். அவற்றுள் திருவாவடுதுறை ஆதீனமும் தருமபுரஆதீனமும் அருள்வளமும் பொருள் வளமும் நிறைந்த அவிச்சின்னபரம்பரைகள். இத்தகைய இரண்டு ஆதீனங்களிலும் இன்று எழுந்தருளியிருந்து அருள் ஆட்சி நடாத்துபவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக

பரமாசாரிய சுவாமிகள் இருவராவார்கள். இவர்களில் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களோடு துறைசையில் 18-1-52 ல் சந்தித்த நினைவுமலராக துறைசையாதீனவித்துவான் திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் எழுதப்பெற்றது. இதில் துறைசையாதீனத்து வரலாறுமுழுதும் மிக எளிய இனிய செந்தமிழ்நடையில் எழுதப்பெற்றுள்ளது. இத்துணையமைப்புக் களும் தருமபுர ஆதீனமும் பெற்றுள்ளது என்று தருமபுர ஆதீன வரலாறும் இறுதியில் தரப்பெற்றுள்ளது. இரண்டு பெரிய ஆதீனங்களும் சிவக்ஷேத்திர பரிபாலனம், குருக்ஷேத்திர பரிபாலனம் செந்தமிழ்ப்பரிபாலனம் முதலிய எல்லாவற்றாலும் ஒன்றை ஒன்று விஞ்சுவதுபோலத் தோன்றும்; சிவஞானப் பேறிவுபடைத்தவரே ஒருநெறிய மனம்வைத்து உண்மை உணர் வர்; இருபேரரசும் என்றென்றும் வாழி என இனிது முடிந்து உயர்ந்த கருத்துக்களை உலகிற்கு உணர்த்துகிறது. நூலாசிரியர் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் செந்தமிழைமுறையாகப்பயின்ற வர்கள். இவர்கள் எழுத்திலும் பேச்சிலும் உறுதிதொனித்து கொண்டேயிருக்கும். திருமூலதேவர், திருமாளிகைத்தேவர், பஞ்சாக்கர தேசிகர் ஆகியோர்களின் படங்களும், ஆதீனத் தலைவர்கள் சந்தித்தபோது எடுத்தபடங்களும் இதில் விளங்கு கின்றன.

இம்மூன்று அரிய பெரிய நூல்களை விரும்புவோர்கள் துறைசையாதீனத்திற்கு எழுதிப்பெறுவார்களாக.

**நான் கண்ட ஜப்பான்:-** எழுதியவர்: உயர்திருவாளர் சு. இராமசாமிநாயுடு அவர்கள், முன்னாள் மேயர், சென்னை.

வெளியிடுவோர்: வெள்ளையன் பதிப்பகத்தார். விலை. ரூ. 2.

ஜப்பான் ஒரு சிறுநாடு. எனினும் உழைப்பால் அது 1905-ம் ஆண்டுல் நடந்தபோரில் ரஷ்யாவையும் வென்றது. மேலைநாட்டு வல்லரசுகளும் முதல் உலகப்பெரும் போரில் இதனை நேச நாடாகக்கொண்டன. இரண்டாம் உலகப்போரில் ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய

நாடுகளின் கூட்டுச்சக்தியோடு போராடித் தோற்றது எனினும் அந்த நாடுகளை எதிர்த்துப் போராடும் அளவிற்கு அது உயர்ந்திருந்தது. ஜப்பான் இவ்வளவு முன்னேற்றம் அடையக்காரணம் என்னை? உழைப்பின் உறுதி. ஜப்பானியர் காலத்தினருமையை உணர்ந்து தொழில்வளத்தைப் பெருக்கி முன்னேறி வருகின்றனர். உழைப்பால் உயர்வுபெற்று வருகின்றனர். எல்லோரும் இன்புற்றிருக்கும்நிலை அங்குக் காணப்படுகிறது எனினும் நில நடுக்கம் எரிமலை இவற்றால் மக்கள் அச்சமும் சிறிது அடைகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு சென்னை முன்னாள் மேயர் திரு. சு. இராமசாமி நாயுடு அவர்கள் தம் கீழைநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் ஜப்பானைக்கண்டுவந்தார். ஜப்பான் இயற்கை எழிலையும் ஜப்பானிய கைத்தொழிற்றிறமையையும் நேரில்கண்டு அவற்றை நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற முறையில் நூலாக - கண்ணால் கண்டகாட்சிகளை மனத்திரையில் கருத்துக் காட்சிகளாகக் காணச் செய்கிறார். ஜப்பானின் நாடு நகர இயல்புகள், மக்கள் இயல்பு, கைத்தொழில்கள், சமயங்களும் கடவுளரும், அன்னார் செய்யும் சடங்குகள், பழக்க வழக்கங்கள், பாராட்டத்தகும் பண்புகள் முதலியன இந்நூலுள் விளக்கப் படுகின்றன. இந்தியாவுக்கு ஜப்பானியரின்மீது எப்பொழுதும் நல்லெண்ணம் உண்டு. ஜப்பானியரின் குழந்தைகளுக்குப்பரிசாக அனுப்பிவைத்த 'இந்திரா' என்ற யானை டோக்கியோ விலங்கு கண்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுவருகின்ற செய்தியும் இந்நூலுள் குறிக்கப்பெற்றுள்ளது.

இந்நூலில் கைத்தொழில் என்ற பகுதி எல்லோரும் படித்து அறிந்துகொள்ளவேண்டிய தொன்று. ஜப்பானியர், இந்தியர்களால் குப்பையில் எறியப்படும் தகரங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அவைகளை விளையாட்டுப் பொருள்களாகச் செய்து இந்திய நாட்டிற்கனுப்பி இலாபம் பெறுகின்றனர் எனின் அவர்களின் தொழிற்றிறமையை எங்ஙனம் சொல்வது? அடுத்து ஜப்பானியர் முத்து எடுக்கும்முறை, செயற்கைமுறையில் முத்துத்தயாரிக்கும்முறைகள் மயிர்க்கூச்சலுண்டாக்கும் மாண்பு

188

உடையன. முத்தெடுக்கும்முறையைத் தமிழகமே முதலிலறிந்த தெனினும் இன்று தமிழர்களைவிடஜப்பானியர் தான் முத்தெடுக்கும் முறையில் முன்னேறி இருக்கின்றனர். இத்தொழிலை ஜப்பானில் பெண்களே மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. முத்துக்கள் இருக்கும் என்று எண்ணி எத்தனையோ சிப்பிகளைப் பாழ் படுத்தும் முறை ஜப்பானியரால் கைவிடப் பட்டிருக்கிறது. முத்துக்குளிக்கும் பெண்கள் நான்காண்டு பருவமுற்ற இளஞ்சிப்பிகளை எடுத்துவருகின்றனர். அதனுள் முத்துத்தொழில் அலுவலகத்தில் வேலை பார்க்கின்ற மக்கள் முத்துக்களின் ஓடுகளால் செய்யப்பெற்ற சிறுமணிகளைப் பழுதுபடாமல் நுழைப்பர். மணிகள்வைக்கப்பெற்றமுத்துச்சிப்பிகள் மீண்டும் கடலிலே விடப்படும். குறித்த காலம் கழித்து அவை மீண்டும் எடுக்கப்படும். அம் முத்துச்சிப்பிகளுக்கு இடையூறு விளையாமல் கம்பி வலைகளால் அவை பாதுகாக்கப் பெறுகின்றன. வைகாசியிலே ஞாயிற்றுச்சோதியின் மழையிலே முத்துக்கள் உயிர்க்கும் என்று எண்ணியிருக்கும் நமக்கு இன்னோரன்ன பல செய்திகள் வியப்பை விளைக்காமலிருத் தற்கு இடமில்லை. இங்ஙனம் மதிநுட்பத்தால் மாண்புற்ற ஜப்பானியன், கைத்தொழில் வளத்தால் பெறுகின்ற ஊதியம் புள்ளிவிவரங்களுடன் நூலுள் காட்டப்படுகின்றன. குண்டூசி முதல்போர்க்கப்பல்கள்வரை ஜப்பானியர் செய்துவருகின்றனர். பட்டுத்தொழில், சாயம் பூசுதல், பீங்கான்செய்தல், தேயிலை வளர்ப்பு, காமிராக்கள் செய்தல், நிலக்கரி இரும்பு முதலிய வற்றால் செய்கின்ற தொழில் வளங்கள் ஆகியன இந்நூலுள் எடுத்துக்காட்டப்பெறுகின்றன.

புத்தமதம் போன்ற சமயங்களும் ஜப்பானில்பரவியுள்ளன. சமயக்கொள்கைகள் சிலவற்றில் அது இந்தியாவோடு தொடர்பு கொண்டுள்ளது என்பதை இந்நூலின் வாயிலாக அறியலாம். ஜப்பானியரின் சடங்குகள், பழக்கவழக்கங்கள், பாராட்டத்தகும் பண்புகள் இவை எல்லோரும் படித்தின்புறுதற்குரியன.

கையெடுத்தோர் முகமன்றித் தரையறியா இயல்பினதாக முதலிலிருந்து முடிவுகாறும் இனிமையான செந்தமிழ் நடையில்

189

எழுதப்பெற்றுள்ளது. நாயுடு அவர்கள் செந்தமிழ் நடையில் பண்டிதரையும் வியக்கச்செய்யுமளவிற்கு, தம் உரைப்போக்கை அமைத்துள்ளார். இங்ஙனம் நாயுடு அவர்கள் அரசியலில் ஈடுபட்டு நாட்டுத்தொண்டு செய்வதோடுமட்டுமல்லாமல் அறிவியல் நூலை ஆக்கி அளிக்கும் துறையிலும் இறங்கி ஆக்கவேலைகள் செய்ய முற்பட்டுள்ளது போற்றத்தக்கதாகும்.

இந்நூலை அழகுபெற முந்நிறத்தோடு விளங்கும் உறையுமணிவித்து முதல்தரமாக வெளியிட்டுள்ளனர் வெள்ளையன் பதிப்புக் கழகத்தார். 150 பக்கங்களுக்குமேற்பட்டுள்ள இந்நூல் அழகிய அட்டையோடுமட்டுமின்றி அதற்கேற்ப உயர்ந்த தாள்களிலும் அச்சிட்டு வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது. நூல் பதிப்பாளர்களுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்றுகூடச் சொல்லலாம். விலையும் ரூபாய் இரண்டுதான். இத்தகைய அருமையான நூலைத் தமிழ்நாட்டுக் கலைநிலையங்கள் பாடநூலாக ஏற்றுக்கொள்ளும்நாள் வெகுதூரத்தில் இல்லை எனலாம்.

Eternal truth of Sita Devi. ஸீதைசென்னபதில். காகர்லா, S. ஸுந்தரமைய்யா 38, A. படேல்ரோடு, பெரம்பூர், மதராஸ் 11.

ஸுந்தரகாண்டத்தில் ஹனுமானுடன் ஸீதை பேசிய பிறகு ராக்ஷஸிகள் விழித்துக்கொண்டு ஸீதையை "நீ யாருடன் பேசிக்கொண்டிருந்தாய்?" என்று வினவினார்கள். அதற்கு ஸீதை, "உங்களுக்கல்லவா அவன் யார் என்று தெரிய வேண்டும்; பாம்பின்கால் பாம்பிற்குத்தெரியும்; நான் அவனை எப்படி அறிவேன்; எனக்கும் அவனைப்பார்த்ததும் பயமாகவிருந்தது; அவன் மாறுவேடத்தில் வந்த ஒரு ராக்ஷஸனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்" என்று பதில் கூறினாள். கம்பரும் இந்த இடத்தில் இதை ஒட்டியே பாடியிருக்கிறார். இவ்விதம் ஸீதை கூறியது பொய்யா? மெய்யா? பொய்யானால் அவள் பொய்சொன்னது அவள்மேன்மைக்கு இழுக்காகாதா? மெய்யென்றால் அதை எப்படி நிரூபிப்பது? என்றெல்லாம் ஒரு சர்சை 1941ம் வருஷத்தில் ஹிர்துபத்திரிக்கையில் பல அறிஞர்

களின் கடிதங்கள்மூலம் நடந்தது. அதன்பின் 1944ல் கல்லிடக்குருச்சி பிருமஸ்ரீ சங்கரசாஸ்திரிகள் என்ற பண்டிதர் மூல சுலோகங்களுக்கு வியாக்கியானம் செய்யும் திறமையினால் ஸீதை பேசிய வார்த்தைகளில் உண்மைக்கருத்துக்கள் உள்ளடங்கியிருப்பதாய் வெளியிட்டார். அவருடைய வியாக்கியானத்தைப் பலர் புகழ்ந்திருக்கிறார்கள். அவ்விதமே கம்பரின் கவிதைக்கும் வியாக்கியானம் செய்யக்கூடும். ஆதலால் ஸீதை உண்மையே பேசினாள். அவளுடைய பெருமைக்கு அழுக்காறு யாதும் இந்த வாக்கியங்களினால் ஏற்பட்டுவிடவில்லை என்பது இப்புத்தகத்தின் அடக்கம் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் சேர்ந்து நூறு பக்கங்களுக்கு மேல் இந்தவியாக்கியானங்கள் விரிந்திருக்கின்றன. வியாக்கியானத்திறமை மெச்சத்தக்கது. விலை அணா எட்டு.

மருத்துவக்குடி பஞ்சாங்கம்:— எப்படி பலபல பெயர்களுடன், பலபல விதமாகப் பத்திரிகைகள் மனதை வசீகரிக்கின்றதோ, அதுபோலவே பஞ்சாங்கத்திலும் பலவிதம் வந்துவிட்டது. அதில் மக்கள் விழிப்புடன் பார்த்து வாங்கவேண்டும் என்பதற்காகத்தான் "ஒரிஜனல் மருத்துவக்குடி பஞ்சாங்கம்? போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்." என்றெல்லாம் மேலட்டையில் பொறிக்கவேண்டிய நிலை வந்துவிட்டது. ஆகவே அதைப் பார்த்தாவது மக்கள் ஏமாறமாட்டார்களல்லவா? G.S.V. என்ற ரப்பர்ஸ்டாம்பும் அட்டையிலிருக்கிறதா என்றும் பார்த்துக் கொள்ளவேண்டும். விலை அணா. 6. விலாசம்:- பி. வி. நாதன் அன் கோ, கும்பகோணம்.

---

'ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் கண்டேன் சிவன்பெருந் தன்மையை'

—திருமூலர்.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(கரஹூல் பங்குனிமீ 1உ முதல் 30உ வரையில்)

## 1. மேஷம். அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

பரணி நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட மேஷராசிக்காரர்கள் ஷை பங்குனி மாதம் ரொம்பஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சத்துருபாதை, இடம் மாறல், பெரியோர் மேலோர் கோபத்தால் தீங்கு உண்டாதல், பொருள் நஷ்டம், சோராக்னிபீடை, ரிணரோகபீடை, மானநஷ்டம், நீசாசாரம், குலாசாரவிரோதம், வீண்மனஸ்தாபம் முதலிய அசுப பலன்கள் நடைபெறும். அத்துடன் பிரபுக்களாகில் வாஹனத்திலிருந்து நழுவுதலும் எதிர்பாராத ஆபத்துக்களும் உண்டாகும். மற்ற இரண்டு நக்ஷத்திரக் காரர்களுக்கும் நினைத்ததெல்லாம் கைகூடுதலும், எங்கும் வெற்றியும், கீர்த்திபத்திரங்களும், லாபமும், சுபமும் உண்டாகும். திங்கள், வியாழன் சுபமாகும்.

## 2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

இம்மாதம் கார்த்திகை ரோஹிணி சம்பந்தப்பட்டவர்களுக்கு முன் பின் பத்துத்தினங்கள் பூர்ணசுபமாகும். நடுப்பகுதி அசுபமாகும். தூர யாத்திரையிலிருந்து திரும்புதல், சுபசமாசாரக் கேள்வி, பந்துமித்திர கல்யாணவைபவம், பிரமோஷனுடன் உத்தியோகமேன்மை, தொழிலாளி களுக்கு விசேஷ லாபகர சந்தோஷம், களத்திரபத்திர சுகங்கள், ஆஸ்தீக ஸஜ்ஜன சேர்க்கை, காரியசித்தி இவைகளும மிருகசீரிஷம் சம்பந்தப்பட்ட வர்களுக்கும், நடுப்பகுதிக்காரர்களுக்கும் சில்விஷபீடை, நீசசண்டாள கலகம, தனதான்யநஷ்டம், காரியவிக்னம் முதலிய உண்டாகும். வெள்ளி, புதன் சுபமாகும்.

## 3 மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

திருவாதிரை, புனர்பூசக்காரர்களுக்கு இம்மாதம் அசுபபலனை விசேஷமாய்க்காட்டும். நம்பினவன் மோசம்செய்வதால் பலவிதசிரமங்கள், எங்குபோனாலும் தடங்கலும், அபவாதங்களும் உண்டாகும். தூரதேசத் திலிருந்து அப்பிரியவார்த்தை கேள்வி, கேவலமனுஷ்யாளிடத்திலும் வணங்கும்படியாகுதல், தேவபிராமண கோபமடைதல், நஷ்டமும் கஷ்டமும் அதிகமாகுதல், மனோபீதியடைதல் முதலியவைகளும் மிருகசீரிஷம் பின்பாதக்காரர்கள் சந்தோஷமடைதலும், விவாஹாதி சுப சோபனாதிகளில் ஈடுபடுதலும், சுபவிரயங்களும், நஷ்டதனபிராப்தியும்,

பெரியோர் அன்பும், சகலகாரியங்களிலும் ஜயமும் ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

கடகராசி எல்லா நக்ஷத்திரங்களுக்குமே முதல் பகுதியில் சுபமில்லை. அகாரணகலஹம், விஷபீதி, ரோகபயம், தனநஷ்டம், சத்துருபாதை, வியாகூலம், பிரபுகோபம், அவமானச்சொல்கேள்வி, பிதுர்வம்சாரிஷ்டம், தொழில்குறை, இடம்மாறல், அனுசாரபழக்கம், புத்திக்குழப்பம், சகல காரியங்களும் தாமதப்படல் முதலியவைகளும் பிற்பாதியில் ஷி மூன்று நக்ஷத்திரங்களுக்குமே சுபத்தை உண்டுபண்ணும். ராஜசன்மானம், வெகு ஜன பழக்கம், உல்லாசயாத்திரை, மேலோர் பெரியோர் வரத்து, புண்ணிய க்ஷேத்திரவாசம், ஸ்தாவரசொத்து வரத்தும், சுபசோபனுதிகளும், சேவக ஜன சேர்க்கை, வாஹனலாபம், காலிகன்று விருத்தி, தனதான்ய விருத்தி, வியாபார லாபம் இவைகளும் ஏற்படும். வியாழன், திங்கள் சுபமாகும்.

5. சிம்மம். மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம், உத்திரம் இருநக்ஷத்திரங்கள் சம்பந்தப்பட்ட சிம்மராசிக்காரர்கள் மிசிரபலனை அடைவார்கள். சுபம் அசுபம் சமமாகும், அதிகச் செலவுகளும், வீண் அலைச்சலும், தொழில்குறைவும், சஞ்சலபுத்தியும், குடும்பத் தொல்லைகளும், கடன்வாங்கலும் ஏற்படும். பூரநக்ஷத்திரக்காரர்களுக்கு பூரணசுபம்தரும், எதிலும் வெற்றியடைவர், சூதாட்டத்தில் (ரேஸ்போலொத்ததில்) ஜயமுண்டாகும், கெட்டவழியில் பணமசேரும், துஷ்டர்கள் சிநேகத்தால் தன்காரியங்களைச் சாதித்துக்கொள்வர். அநேக கஷ்டங்கள் வந்தாலும் பொருட்படுத்தாமல் உற்சாகத்தோடு கூடினவராகவே இருப்பார்கள். செவ்வாய், ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

ஹஸ்தம், சித்திரை சம்பந்தப்பட்ட கன்னியாராசி பலன் சுபமாகும் மேலோர் பெரியோர் சந்திப்பு, கௌரவப்பட்டங்கள், இராஜாங்கத்தால் மதிக்கும் தன்மை, உத்யோகலாபம், சஞ்சாரபலன், புண்ணியகாரியங்களில் ஈடுபடுதல், யஞ்ஞாதிபலன்கள், அதிகச்செலவுகள்மூலம் மனேஉற்சாகம், நூதனவாகன சேர்க்கை, தொழிலாளர்களுக்கு உற்சாகம், இல்லற சுகபோகங்கள், உல்லாசயாத்திரைகள் இவைகள் சித்திக்கும். மாதக்கடைசி ஐந்துதினங்கள் ஷி நக்ஷத்திரங்கள் சேர்ந்த ராசிக்காரர்களுக்கு கஷ்ட பலனைத்தரும். உத்திரநக்ஷத்திரம் மூன்றுபாதக்காரர்களுக்கும் ஸ்திரவாசமும், உத்யோகம் மேன்மேலும் விருத்தியும், சந்தோஷமும் உண்டாகும். சுபசோபனுதிகள் நடக்கக்கூடியவார்த்தைகள் உண்டாகும், மனம்மாத்திரம் குறைவடைந்துகொண்டேயிருக்கும், ஆனுலும் சுபமாகும், வியாழன் சுபம்.

193

## 7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

இம் மூன்று நக்ஷத்திரம் சம்பந்தப்பட்டமட்டிலும் இம் மாதம் சுபமே. ஆனாலும் விசாகநக்ஷத்திரம் துலாராசிக்காரர்கள் மிகுந்த கஷ்டப்படுவார்கள். வியாதியால் துன்பம் அதிகரிக்கும், வியாபாரிகளாகில் கேசில்மாட்டிக் கொள்வார்கள். அவமானம் ஏற்படும். சித்திரையும், சுவாதியும் சேர்ந்த ராசிக்காரர்களுக்கு எங்கும் கீர்த்தியும், நினைத்ததெல்லாம் கைகூடுதலும், வெகுநாளாக எதிர்பார்த்து நடவாதகாரியங்கள் நடைபெறுதலும், கிரய விக்ரயங்களும், காலிகன்று விருத்தியும், குடும்ப சுகமும், களத்திரபுத்திராதிகளால் மேன்மையும், சுபசமாசார வரத்தும் சுபமும் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விசாகத்தைத்தவிர அனுஷம், கேட்டை இருநக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட விருச்சிகராசி பலன் பூர்ணசுபத்தைத்தரும். பிராம்மணனால் அனுகூலம், தெய்வபலம் தோன்றுதல், ஆஸ்தீகபுத்தி விருத்தியாகுதல், யஞ்ஞயாகாதிகிருதுபலன்கள் அடைதல், பெரியோர் மேலோர் பழக்கம், குடும்ப சந்தோஷம், லாபகரத்தோடு வியாபாரப்பெருக்கு, ஓயாதவேலைதொந்தரவுகள், யஜமானர்களின் அன்புமிகுதி முதலிய சுபங்கள் நடைபெறும். மாதத்தின் நடுப்பகுதியில் பத்துதினங்களில் உஷ்ணரோகத்தால் சரீரபீடை உண்டாகி விலகும். விசாகநக்ஷத்திர விருச்சிகராசிக்காரர்கள் தாங்க முடியாத கஷ்டத்துக்குள்ளாவார்கள், தெய்வபலம் இருந்தால் ஜயிக்கலாம், நாஸ்தீகராகில் அழிவார்கள். சனி, புதன் சுபமாகும்.

## 9. தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

பூராடம் சம்பந்தப்பட்ட தனுர்ராசிக்காரர்களுக்கு வரவும் செலவும் சமமாகும். உத்யோகலாபம், கீர்த்திபத்திரம், பெரியோர் சிநேகம், பந்துமித்ராளுடைய சேர்க்கை, விவாகாதிசுபசோபனாதிகள் மூலம் சந்தோஷம் இவைகள் ஏற்படும். உத்திராடத்துக்குக் கால் தனுர்ராசிபலன் ஆரம்பம். பத்துத்தினங்களில் சந்தோஷமாயும், மத்தியில் கவலையும், கடைசி பத்து தினம் சமபலனாகவும் நடக்கும். மூலநக்ஷத்திரக்காரர்கள் வியாதியால் அதிகத் துன்பமடைவார்கள், குடும்பத்தில் ஒற்றுமைக்குறைவும், மனஸ்தாபமும் ஏற்படும், வைத்தியச்செலவு அதிகமாகும், மனோவேதனையாகவேயிருக்கும். சனி, செவ்வாய் சுபத்தைத்தராது. 18, 21 தேதிகள் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

சிரவணநக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட மகாராசிக்காரர்களுக்கு விவசாய நஷ்டம், சத்துருபீதி, மானஹானி, களத்திரவர்க்கத்தொல்லை, வியாதிபயம்,

அதிகச்செலவு, அபவாதக்கேள்வி, படிப்பு விக்னம், ஆரோக்கியக்குறைவு இவைகளும்; உத்திராடம், அவிட்டத்திற்குச் சமபலனும், சுகதுக்கசமதையும், அதிக உழைப்பும், வேலைக்குத்தக்க லாபமில்லாமலும், மனோகிம்மதியில்லாமலும் இருக்கும். மாதத்தின் மத்தியில் பத்துதினங்கள் ஷை மூன்று நக்ஷத்திரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எல்லாம் சுபகரமாகக்காட்டும். மாதக்கடைசி ஐந்து தினங்களில் எதிர்பாராத மனுஷ்யாள் வாத்தும, சந்தோஷமும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டம் சம்பந்தப்பட்ட கும்பராசிக்காரர்களுக்கு விருதா அலைச்சல் ஏற்பட்டு, கடைசியில் தனநஷ்டத்தோடு சிறிதுசுகம் ஏற்படும், ஒருவாறு மனச்சாந்தியாகும்; மற்ற இரண்டு நக்ஷத்திரக்காரர்களுக்கும் பலவித இடஞ்சல்களும், தனநஷ்டமும், தொழில் நஷ்டங்களும், மேலோர் பெரியோர் மனஸ்தாபமும், சத்துருபாதையும், சோகபீடையும், குடும்பத் தொல்லையும், ஒற்றுமைக்குறைவும், கீர்த்திபங்கமும் சிரமபலன்களும் அதிகமாகும். தெய்வபலத்தை நாடுகிறவர்கள் சமனமடைவார்கள். சனி, வியாழன் கெட்டபலனைத் தரும். கூடியவரை ஜாக்கிரதையாய் இருப்பது நலம்.

## 12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

உத்திரட்டாதி, ரேவதி சம்பந்தப்பட்ட மீனராசிபலன் சுபமாகும், எல்லாம் தெய்வசக்தியால் அசாத்தியமாக தோன்றுவதெல்லாம் கைகூடும். உத்யோகமேன்மை, குடும்பசுகம், ஆபரணச்சேர்க்கை, நித்தியம் மிருஷ்டான்ன போஜனம், மேற்குத்திக்கில் பிரயாணம், சோதரவர்க்கவிருத்தி, நீசஜனசேர்க்கை, அதில் நன்மைகாணுதல் முதலிய சுபங்களும்; பூரட்டாதி சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆரோக்கிய குறைவும், வைத்தியச்செலவுகளும், வீண் அலைச்சல்களும், அபவாதபயமும், மனோகஷ்டமும், அசுபசமாசாரக் கேள்வியும் உண்டாகும். வியாழன், புதன் சுபமாகும். தெய்வபலன் தோன்றும்.

———

"உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே."

—அப்பர்.

வி - ரை:- பிரயாசத்தால் அறியப்படுபவள் எவளோ அவள் துர்க்கை யென்பர். 'எவளைக் காட்டினும் மேலானது கிடையாதோ அவள் துர்க்கை'. தேவியுபநிஷத். 'பரமாத்மாவாகிய பிரமத்தோடு கலந்திருக்கும் பிரகிருதி சக்தியே துர்க்கையாம்'. தேவீபாகவத வசனம். 15

கோரவசுரர்குலமொடுக்கிக் கனல்கொப்பளிக்குநின்சூல
நேரும் பீதி களைந்தெம்மை நித்தம் புரக்க வருள்காளி
சாருமசுரர் தேசழித்துச் சகத்தின்னொலியா னிறைகண்டை
யாரும் பாவம்போக்கிமைந்த ராமெங் களைக்காத்
திடவருளே.

கு - ரை:- கனல் - நெருப்புச்சுவாலை, நேரும்பீதி - அடிக்கடியுண்டாகின்ற பயங்கள். புரக்க அருள் - காப்பாற்றுதற்கு அருள்செய்வாய், தேசு - கீர்த்தி வீரம் பலம் ஆகிய தேசுகள், சகத்தின் ஒலியால் நிறை கண்டை - உலகினைத் தமது சப்தத்தினால் நிறையும்படி செய்கின்ற உனது மணியானது, ஆரும் - நிறைந்த. 16

திதியின் சுதர்கள் குருதியொடு சேருமிதயத்தசைச்சேறு
துதையு மொளிசேர் நினதுகட்கஞ் சுபங்க ளளிக்க
வெங்களுக்கே
மதியின் வதனச்சண்டிகையே மாவார்காத்தியாயனியே
புதியகஞ்சநிகர்நினது பொன்னார்பாதம்போற்றினமால்.

கு - ரை: குருதி - இரத்தம், இதையம் தசைச்சேறு - இருதயத்திலுள்ள மாமிசமாகிய சேற்றில், துதையும் - தோய்கின்ற, கட்கம் - வாள், அளிக்க - கொடுக்கட்டும், சண்டிகை - சண்டனைக் கொன்றவள்; கோபமுடையவள், காத்தியாயனி - கத்தியயனமுனி கோத்திரத்தில் பிறந்தவள், புதிய கஞ்சம் - அப்பொழுதலர்ந்த செந்தாமரைமலர், பொன் ஆர் பாதம் - பொன் போன்ற அழகுள்ள திருவடிகள், "பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" தேவாரம், போற்றினம் - துதித்தோம். 17

தேவி நினது திருவருளாற் சிதைந்துரோக மகன்றொழிக
மேவ விட்ட காமியங்கள் விளங்கா சிரிதர் தங்களுக்கே
யோவ வாபத் துனையடைந்தார் தம்மை யெவருஞ்
சரணுறுவர்
பாவவவுணர் வதைபுரியப் பரைநீ யன்றி வேறெவரே.

கு-ரை:- ரோகம் சிதைந்து - நோய்கள் கெட்டு, இட்ட காமியங்கள் மேவ - விரும்பிய பொருள்களை விரும்பியபடியே பெறுதல் உண்டாகுக, ஆசிரிதர் - உன்னைச் சரண்புகுந்தவர்கள், ஓவ - ஒழிக, உனை யடைந்தார்.........சரணுறுவர் - உன்னிடத்திற் சரணம்புகுந்தவரிடத்தில் யாவரும் சரணம் புகுவார்கள்.

வி - ரை: தேவி பெரிய ரோகங்களை அழித்து அருள் செய்பவள் ஆதலின் 'தேவி நினது......ஒழிக' எனத் துதிக்கப் பெற்றனள். தேவி ரோகமாகிற பருவதத்திற்கு வச்சிராயுதமாயிருப்பவள் ஆதலின் "ரோகபர்வததம்போளி" என்று லளிதா சகஸ்ரநாமம் கூறுகின்றது. அசுரரை யழிப்பவள் தேவியையன்றிப் பிறிதெவருமில்லையென்பது கடைசியடியின் கருத்து. 18

ஞான நூல்கண் மனு நூல்க ணவிலும் வேதத்
துட்பொருள்க
ளூன மிலவாஞ் செயற்காண்ட மனைத்து மிருந்து மிவ்
வுலகை
மான மில்லா மாவந்த கார மமதைக் குழிச்சுழற்றும்
மான முடையாள் நீயன்றி வேறிங் கெவர்சொன்
மாதாவே.

கு - ரை: ஞானநூல்கள் - தத்துவஞான சாத்திரங்கள், மனுநூல்கள் - மனு முதலியவரால் செய்யப்பெற்ற தரும சாத்திரங்கள், வேதத்து உட்பொருள்கள் - உபநிடதங்கள். "மெய்தெரி யாரணந்தான் வேதத்தின் ஞானபாகை, மையிலுட் பொருளினுமம் மற்றுப நிடதமென்ப" சூடாமணி நிகண்டு. செயல்காண்டம் - கருமகாண்டவாக்கியங்கள் (முதலிய), அனைத்தும் - எல்லா நூல்களும், இவ்வுலகை - இந்த உலகத்திலுள்ளவர்களை, மானம் - அளவு, மா அந்தகாரம் - பெரிய அறியாமை

யென்னும் இருள் நிறைந்த, மமதை குழி சுழற்றும் மானம் உடையாள் - அபிமானமாகிய பள்ளத்தில் தள்ளிப் பிறப்பிறப்புகளாகிய சுழலில் சுழலச் செய்கின்ற வலிமையுடையவள். "என தாஞ் சுழிசேர் மோகக்குழி" 1 அத், 27 செய்.

வி - ரை: ஞானநூல் முதலியவைகளைக் கற்றுணர்ந்த அறிஞர்களையும் தேவி தனதுமாயையின் மகிமையால் அபிமானமாகிய பள்ளத்தில் தள்ளிப் பிறப்பிறப்புக்களில் சுழலச் செய்கின்றாள் என்று தேவியின் பிரபாவம் தெரிவித்த படியாம். "உலகபதிமாயைமைந்தாற் சேதனரே குபுதராகி மோகமெனுங் குரைசேர் கடலின் மூழ்கினரால்" 1அத், 28 செய். பொருள் முதலியவற்றிற் செல்லும் எனது என்னும் அபிமானமே மமதையாம் "பொருட்பாற்பினும்பாசம் ஈருமமதை" 1 அத், 22செய். மானமென்னும் சொல் வெவ்வேறு பொருளில் இரண்டுமுறை வந்தது சொற்பின்வருநிலை யணியாம். 19

ஒல்லை யெம்மை யரிபயத்தா லுளையா வண்ணங் காத்
தருள்வாய்
மல்ல லுலகி னகமொழிப்பாய் மாவுற் பாத பாகசமாம்
அல்லன் மாரி யாதிகளு மடியார் துயரு மொழித்திடுவாய்
புல்லும் புவனத் தார்போற்றும் புவன வரதா யெனத்
தொழுதார்.

சு - ரை: ஒல்லை - விரைவு, அரிபயம் - பகைவர் செய்யும் பயங்கரச் செயல்கள், உளையாவண்ணம் - வருந்தாதபடி, உலகின் அகம் - உலகினர் செய்தபாவங்கள், உற்பாத பாகசம் ஆம் - உத்பாதங்களுடைய பலத்தைக் கொடுக்கும் காலத்தால் தோன்றும், உத்பாதம் - பின்னிகழும் தீமைகளை முன்னறிவிப்பது என்பர். அல்லல் மாரி யாதிகளும் - துன்பத்தைக் கொடுக்கும் மாரி முதலான நோய்களும், புல்லும் - தொடர்ந்திருக்கின்ற, வரதாய் - வரம் கொடுப்பவளே.

வி - ரை: புல்லும்.........வரதாய் என்றதனால் தேவி உலகினரால் வரத்தின்பொருட்டுத் துதிக்கப்படும் மேலான தன்மையுடையவள் என்பது தெரிகிறது. 20

உற்ற மமதைக் குழிவீழ்ந்தே மோக விருளா லொளி
மழுங்கப்
பெற்ற ஞானக் கண்ணொளியைப் பெறுதற் கம்மே
யருள்புரிவாய்
வெற்றி யரக்கர் நாகமரி விளங்கு தாவ மாதிகளாற்
பற்று துன்படமகலவவண் பாலித் தருள்வாய் சிவதூதி.

கு - ரை: மமதை - அபிமானம், மோகம் - உண்மைப் பொருளின் உருவம் மறைதலும் அது வேறு பொருளின் உருவமாய்த்தோற்றுதலும் ஆம், ஒளி - ஞானவொளி, ஞானம் ஒளியை பெறுதற்கு - உனது ஞானமாகிய அருளொளியைப் பெற்றுப் பிரகாசமடைவதற்கு. நாகம் - பாம்பு, அரி - பகைவர், தாவம் - காட்டுத்தீ. பற்று துன்பம் - பற்றப்படுவதனால் ஏற்படுகின்ற துன்பங்கள். அவண் - (துன்பம் ஏற்படுகிற) அவ்விடங்களில் எல்லாம் (நீ வியாபித்திருத்தலால்), பாலித்து அருள்வாய் - உலகினரைக் காப்பாற்றி அருள்செய்வாய்.

வி - ரை: மோகவிருளால் ஒளிமழுங்கப்பெற்ற எனது அருளொளியைப்பெற்று ஞானக்கண்ணுதற்கு அருள்புரிவாய் என்பது முன்னிரண்டடிகளின் கருத்து.

அரக்கர் முதலியவர்களால் துன்பம் ஏற்படும் அவ்விடங்களிலெல்லாம் தேவி வெளிப்பட்டு நின்று தன் அடியார்களைக் காப்பாற்றும் இயல்பினள் என்பது பின்னிரண்டடிகளின் கருத்து. 21

விளங்கும் விசுவே சுவரியமே விசுவ பாலி விசுவமுறுங்
களங்க மகலு முருவுடையாய் விசுவந் தரிக்குங்
கன்னிகைநீ
வளங்கொ ளுன்னைப் பிரமன்முதல் வானோர் பத்தி
யால்வணங்கித்
துளங்கும் விசுவா சிரயர்களா யிருக்கின் றூர்க
ளெனத்தொழுதார்.

கு - ரை: விசுவம் - உலகம், விசுவேசுவரி - உலகத்திற்கு நிக்கிரக அனுக்கிரகங்களைச் செய்பவள், விசுவபாலி - உலகினைக் காப்பவள், விசுவம் ......... உருவுடையாய் - உலகினைக் குற்ற மற்ற உடம்பாகக் கொண்டுள்ளவளே, தரிக்கும் - தாங்கிக் கொண்டிருக்கின்ற, கன்னிகை - அழியாத தன்மையுடையவள். ஒன்பதுவயது கன்னிகையுருவில் விளங்குகின்றவள் எனலுமாம். வணங்கி - வணங்கியதனால், ஆசிரயர்கள் - காப்பாற்றுபவர்கள்; தாங்குபவர்கள்.

வி - ரை: விசுவம் .......... உருவுடையாய் என்றதனால் உயிரற்ற சடமும் உயிருள்ள சித்தும் ஆகிய இருவகையுருவ மாய்க் காணப்படுகின்ற இவ்வுலகின் வடிவமானவள் தேவி எனத் தெரிவித்தபடியாம். 22

என்று தேவர்கள் தோத்திரஞ் செய்தலு மெனையாள்
கின்ற வன்னையுங் கிருபையோ டவர்முக நோக்கி
யின்று நீவிர்க ளுலகர்க்கு நுங்கட்கு மின்ப
மொன்று நல்வர மிசைக்குதி ரெனவவ ருரைப்பார்.

கு - ரை: இன்பம் ஒன்று - இனிமை பொருந்திய, இசைக்குதிர் - கேளுங்கள். அவர் - அந்தத் தேவர்கள்.

வி - ரை: தெய்வத்தின் கொடைக்கு வரமென்று பெயர்.

அகில நாயகி யெம்பெரும் பகையழித் ததனல்
அகில லோகமு மகிழ்ந்துதந் தொல்லையி னமைந்த
வகில நன்மையு மெங்களுக் களித்தரு ளினக்கே
அகில மங்கல பதம்பணிந் திடுங்கைமா றளித்தேம்.

கு - ரை: அகிலம் - யாவற்றிற்கும்; பெரும்பகை - சும்பன் முதலிய பெரிய பகைவர்கள், லோகம் - உலகினர். தம் தொல்லையின் - தம்முடைய பழைய பதவிகளில்; அதிகாரங் களில், அமைந்த - பொருந்தினர்: அகில மங்கல பதம் - எல்லா நன்மைகளையும் தருகின்ற நின் திருவடிகள், அளித்தேம் - செய்தேம்.

வி-ரை: தேவர்கள், தம்முடைய அதிகாரங்களைப் பிடுங்கிக்கொண்ட அசுரர்களை அழித்துத் தமது பழைய அதிகாரங்களைத் தந்தருளிய தேவிக்குத் தாம் செய்யும் வணக்கமே பிரதியுபகாரமென்றும் அதனைத் தேவி யேற்றருளவேண்டுமென்றும் வேண்டியபடியாம். இச்செய்யுளில் அகிலம் என்னும் ஒரு சொல் ஒரே பொருளில் நான்குமுறை வந்தது சொற்பொருட் பின்வருநிலையணியாம். 24

இத்தி றம்பகை யெதிர்பொழு துறிலெமை யிறையிற்
சித்த மீமிசை யருளொடு புரத்தனின் செயலென்
றுத்த ரஞ்சொல் வம்மைவை வச்சுத வுரவோன்
மெத்து மந்தரத் திருபத்தெட் டெனுமுக மேவும்.

கு-ரை: இ திறம் - இவ்வகையாக, பகை - பகைவர்; அசுரர். எதிர்பொழுது உறில் - எங்களை எதிர்க்கின்ற காலம் நேர்ந்தால், இறை - விரைவு, சித்தமீமிசை - மனதில் உண்டாகின்ற, அருளொடுபுரத்தல் - அருளினால் காப்பாற்றுதல், நின் செயல் உன்னுடைய அருட்செயலாதல் வேண்டும். உத்தரம் சொல - தேவர்கள் பதில்சொல்லவும், அம்மை - தேவி மேலும் சொல்லுவாள். வைவச்சுத உரவோன் - வைவசுதன் என்னும் மனுவினுக்குரிய, மெத்தும் அந்தரத்து - மேன்மையான ஆட்சிக் காலத்தில், இருபத்தெட்டெனும் உகம் மேவும் - இருபத்தெட்டாவது யுகம் என்று சொல்லப்படுகிற கலியுகம் வரும்.

வி-ரை: பகை பண்பாகுபெயர். மீமிசை ஒருபொருட் பன்மொழி. அம்மை என்பது அடுத்தசெய்யுளில் வரும் நடுங் கலிரென்றாள் என்னும் வினைகொண்டு முடிகின்றது. இப்போது நிகழ்வது சுவேதவராக கல்பத்து வைவசுத] மன்வந்தரத்தின் இருபத்தெட்டாவது கலியுகமாம். 25

அன்ன காலையிற் சும்பனு நிசும்பனு மவனி
மன்னு வாரவர் தமைத்தெற நந்தன்மா மகளாய்ப்
பின்னஞ் செய்தியான் பின்புவிந் தப்பிறங் கலிற்போய்
நன்னர் வீற்றிருந் தருளுவ னடுங்கலி ரென்றாள்.

கு - ரை: அன்னகாலை - அந்த இருபத்தெட்டாவது கலியுகம். அவனி மன்னுவார் - பின்பு வேறு இரண்டு அசுரர் களாய்) பூமியில் தோன்றுவார்கள், அவர்தமை தெற - அவ்வசு ரர்களை யழிப்பதன்பொருட்டு. பின்னம் செய்து - (அவர்களை) அழித்து, விந்தப்பிறங்கல் - விந்தியமலை, நன்னர் - நன்மை' நடுங்கலிர் - பயப்படா திருங்கள்.

வி - ரை: மகளாய் என்பதனுடன் தோன்றி எனும் சொல் வருவித்துரைக்க. தோன்றி எனும் சொல் குறைந்தது இசையெச்சம்.

"இக்கலியுக ஆரம்பத்தில் நந்தகோபனுடைய மனைவி யாகிய யசோதையின் கருப்பத்தில் மாயாதேவி பிரவேசித்து நந்தா தேவியாக அவதரித்தாள். இவள் கம்ஸனால் கல்லிலே மோதப்பட்டு மாயமாய்த்தப்பி வானவீதியாய் விந்தியமலையை யடைந்து, அங்கு இருபேரசுரர்களைக் கொன்று ஆண்டு நித்திய வாசம் செய்கின்றாள். அவளுக்கு "விந்தியாசல வாசினி" என்று பெயர். இந்த அவதாரம் முடிந்து விட்டது" (இராம கிருஷ்ண விசயம்).

26

துட்ட ராகிய வைப்பிர சித்தர்தோற் றுவரா
லட்டன் னோர்குல முடித்திட ரௌத்திரை யாகி
யிட்ட மோடவர்ப் புசிப்பல்யா னென்றந்தத் திரத்தம்
பட்ட தன்மையா லிரத்தந் திகையெனப் பகர்வர்.

கு - ரை: வைப்பிரசித்தர் - விப்பிரசித்த வமிசத்திற் பிறந்தவர்களாகிய அசுரர்; வைப்பிரசித்தியின் மக்கள் விப்பிர சித்தர். அட்டு - கொன்று. குலம் - கூட்டம், முடித்திட - அழிப் பதன் பொருட்டு, ரௌத்திரை - கோபமுடையவள், புசிப்பல் - புசிப்பேன், தந்தத்து - பல்லில், இரத்தம் - அவ்வசுரர்களின் உடம்பிலுள்ள இரத்தம், பட்டதன்மையால் - பட்டுச் செந்நிற மாகச் சிவந்து தோன்றும் தன்மையால்.

வி - ரை: "இரத்ததந்திகை அவதாரம், இக்கலியுகத்தில் தேவியின் இரண்டாவது உப அவதாரமாகும். இந்த அவ தாரத்தில் தேவி விப்பிரசித்தர் என்னும் அசுரர்களைத் தின்று

தேவர்களையும் மனிதர்களையும் பாதுகாப்பாள். அவ்வசுரரைத் தின்னும்போது தேவியின் பற்கள் அவ்வசுரர்களின் இரத்தத்தால் மாதுளம்பூப்போலச் சிவந்து தோன்றும். அதனால் அத்தேவியை இரத்த தந்திகை என்பர்.'' (இ - ம்) 27

பின்ன ரும்மிவண் சதச்சமை வருடம்பெய் யாது
மன்னு மோர்குறை யப்பக லறவர்கண் மனத்தி
லுன்ன வேயயோ நிசையென வுரைக்கவுற் பவித்தே
யன்னர் தங்களை நூறுகண் ணலரு ளோடும்.

கு - ரை: சதம்சமை - நூறு ஆண்டுகள், வருடம் - மழை, ஓர்குறைமன்னும் - ஒரு கொடியபஞ்சம் உண்டாகும். அப்பகல்- அக்காலம், அறவர்கள் - முனிவர்கள். உன்ன - என்னைத் தியானம் செய்யவும், உரைக்க - சொல்லும்படி, உற்பவித்து - (பார்வதியின் உடம்பிலிருந்து) தோன்றி, அன்னர் தங்களை - அந்தமுனிவர்களை.

வி - ரை:- அயோநிசை - யோனியிற் பிறவாதவள். 'சுக்கில சுரோணிதக் கலப்பின்றித் தர்ம விசேடத்தோடு கூடிய பரமாணுவிலிருந்து உண்டாகியவள்' இப்பொழுது தேவி பார்வதிதேகத்திலிருந்து எப்படித்தோன்றினளோ அப்படித் தோன்றுபவளை அயோநிசை யென்பர். 28

நோக்கி யேயருள் புரிகுவ லெனையவர் நூறு
நோக்கு றுந்நய னத்தியாய் நொடிப்பரா விருட்டி
யார்க்கு மென்மெயிற் சாகத்தைப் பரித்தளிப் பதனாற்
பாக்கி யம்முறுஞ் சாகம்ப ரீயெனப் பகர்வர்.

கு - ரை:- புரிகுவல் - புரிவேன். அவர் - அம்முனிவர். நோக்கு - அழகு, நயனத்தியாய் - கண்களையுடையவளே (என), நொடிப்பர் - சொல்லுவர், ''நொடிப்பிலடை வாயென நொடிப்ப' 13 அத், 6 செய். ஆவிருட்டி - மழை, ஆர்க்கும் - நிறைந்துள்ள, என்மெயில் - என் உடம்பில், சாகம் - பச்சிலைமுதலியவைகள். பரித்து - தாங்கி; சுமந்து, அளிப்பது - காப்பாற்றுவது, சாகம்பரி பச்சிலை முதலியவைகளைத் தாங்கிக்காப்பவள்.

இறுதலும், வீழ்தலும் கையதாகக் கூறுகின்றதாகின் அதனுள் அடங்காது என்பது. அதன் பொருள் கையிற்று வீழ்ந்தவாறுகக்கொள்க. காலமுகி வீழ்ந்தான் என்பதும் அது. கையிற்றான் காலமுகினன் என்பன ஈண்டைக்கு உதாரணமாமோ எனின் அவைவினையெச்ச மன்மையிற் "கண்ணுந் தோளும் முலையும் பிறவும்" என்னும் ஆண்டைக்கே உதாரணமாமெனக் கொள்க. மற்று கையிற்று வீழ்ந்தான், காலமுகி வீழ்ந்தான் என் பனவும் ஆண்டைத் திணை வழுவமைதிக்கு உதாரண மாதலின் ஈண்டைக்கூறவேண்டாஎனின்; திணைவழுவுக்கு அன்று ஈண்டுக் கூறுகின்றது கண்ணுந் தோளும் என்பதே ஈண்டு மேல் தன்வினையான் முடியும் என்று கூறியன ஒருவழித் தன்னேடு தொடர்ந்த பிறவினை யானும் முடியும் என்பதாயிற்று. "சினையொடு முடியா முதலொடு முடியினும் வினையோரனைய" என்பதனல் இதுவுமோர் மரபு வழுவமைதி எனக் கொள்க. குரங்கு கையிற்று வீழ்ந்ததென இம் முடிபு அஃறிணைவினைக்குங் கொள்க.

ஈண்டுச் சினைவினை வினைமுதல் வினையொடு முடியும் என்பதே சொல்லியதெனின் சாத்தனது கையிற்று வீழ்ந்தது என வினைமுடிபுள்ளவழியும் சாத்தனது கையிற்று வீழ்ந்தான் எனவுமாம் பிறவெனின், ஆகாது அம்முதல் தானும் எழுவாயாகியவழியது இம்முடிபெனக் கொள்க. (௲)

ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினை நிலை யானும்
தாமியன் மருங்கின் முடியும் என்ப. (234)

என் - எனின், ஒழிந்த எச்சங்கட்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ - ள்: முதனிலை மூன்றும் ஒழித்து, ஒழிந்த வினை யெச்சங்களெல்லாம் அவ்வினைமுதல் வினையானும் அவ் விடத்து வந்து பொருந்தும் பிறவினையானும் தாம்

நடக்குமிடத்து முடிபுபெறும் என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

உ-ம்: மழைபெய்தென வளம்பெற்றது, மழை பெய்தென உலகமார்ந்தது; மழைபெய்யியர் எழுந்தது, மழைபெய்யியர் மாதவர் அருளினர்; மழைபெய்யின் அறம் பெருகும், மழைபெய்யின் குளம் நிறையும்; மழை பெய்ய எழுந்தது, மழைபெய்யக் குளம் நிறைந்தது; மழைபெயற்கு எழுந்தது, மழைபெயற்கு மாதவர் அருளினர்; சாத்தன் தான் உண்டபின் வந்தான், சாத்தன் உண்டபின் கொற்றவன் வந்தான்; சாத்தன் தான் உண்ணுமுன் வந்தான். சாத்தன் உண்ணுமுன் கொற்றவன் வந்தான்; சாத்தன் உண்டக்கால் வரும், சாத்தன் உண்டக்கால் கொற்றன் வரும்; சாத்தன் தான் உண்டக்கடை வரும், சாத்தன் உண்டக்கடை வரும் கொற்றன்; சாத்தன் தான் உண்டவழிவரும், சாத்தன் உண்டவழிக் கொற்றன் வரும்; சாத்தன் தான் உண்ட விடத்து வரும், சாத்தன்தான் உண்டவிடத்துக் கொற்றன் வரும் என இருவழியும் ஒட்டுக. எடுத்தோதாத பிறவாய்பாட்டிற்கும் உண்பான் வந்தான், சாத்தன் உண்பான் கொற்றன் வந்தான் என்றாற்போல ஒட்டுக. இவ்வெச்சங்களுள் குறிப்புள்ளவற்றிற்கும் இவ்வாறு கொள்க. (௩௪)

பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே. (235)

என்-எனின், இவ்வெச்சங்களுள் எடுத்தடுக்கிய வழிப் படுவதோர் முறைமை உணர்த்தல் நுதலிற்று.

இ-ள்: பலவாற்றானும் வினையெச்சமாகிய சொற்கள் ஒருசொல்லாய் முறை முடியாதே பலவாயடுக்கி வரினும் முன்னின்ற எச்சம் முடியவே அல்லாதனவும் பொருள் முடிந்தனவாம் என்றவாறு.

உ-ம்: உழுது உண்டு தின்று ஓடிப்பாடி வந்தான் என வரும். உண்ணூஉ தின்னூஉ ஓடூஉ பாடூஉ வந்தான் எனப் பிற எச்சங்களும் அடுக்கி வருவன கொள்க.

பன்முறையானும் என்றதனான் ஓரினத்து எச்சமே அன்றி, பலவினத்து எச்சங்களும் மயங்கி அடுக்குதலும் கொள்க.

உ-ம்: உழுது உழுதுண்பான், ஓடூஉப், பாடூஉ தின்பான் என்பன.

இனிச் சொன்முறை முடியாது அடுக்கிவரினும் என்று சொற்கண் முறை முடித்தடுக்கலும் உண்டு என்பதுபோதரக் கூறிய அதனான் சொற்கண் முறை முடித்தடுக்கிவரினும் முன்னது முடிபவே முடியாக்கான் முடிந்தனவும் முடிந்திலவாம் என்பது கொள்க.

உ-ம்: உழுது வந்தான் ஓடி வந்தான் பாடி என நின்றவழி முடியாதவாறு அறிந்துகொள்க.

ஒன்றின முடித்தல் என்பதனால் பெயரெச்சம் அடுக்கிய வழியும் முன்னது முடிய முடியும் என்பது கொள்க.

உ-ம்: "நெல்லரியும் இருந்தொழுவர்" என்னும் புறப்பாட்டினுள் பாயுந்து எனவும், தூங்குந்து எனவும், பாயும் எனவும், கெழீஇய எனவும், அடுக்கின்ற பெயரெச்சம் எல்லாம் 'மிழலை' என்னும் பெயர்கொண்டு முடிந்ததாம் என்று உணர்க. (௩௫)

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே. (236)

என் - எனின், பெயரெச்சமாகிய செய்யும் செய்த என்பனவற்றிற்கு முடிபுணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: நிலப்பொருட்பெயரும், செயப்படுபொருட் பெயரும், காலப்பொருட்பெயரும், கருவிப்பொருட்பெய ரும், வினைமுதற்பொருட்பெயரும், வினைப்பொருட்பெயரு மாகச்சொல்லப்பட்ட அவ்வறுவகைப் பொருட்பெயர்க்கு ஒரு தன்மையான உரிமையினையுடைய செய்யும், செய்த என்னும் இருவகைப்பட்ட சொல்லும் என்றவாறு.

உ - ம்: நிலம்: அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அவர் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் எனவரும். பொருள்: அவனுண்ணும்சோறு, அவளுண்ணும்சோறு; அவருண்ணும் சோறு, அது உண்ணும்சோறு, அவை உண்ணும்சோறுஎனவரும். காலம்: அவனுண்ணுங்காலை, அவளுண்ணுங்காலை, அவருண்ணுங்காலை, அதுவுண்ணுங் காலை, அவை யுண்ணுங் காலை எனவரும். கருவி: அவ னெறியுங்கல், அவளெறியுங்கல், அவரெறியுங்கல், அது எறியும்கல், அவையெறியுங்கல் எனவரும். வினைமுதல்: உண்ணும்வன், உண்ணுமவள், உண்ணுமவர், உண்ணு மது, உண்ணுமவைஎனவரும். வினை: அவனுண்ணுமூண், அவளுண்ணுமூண், அவருண்ணுமூண், அது வுண்ணு மூண், அவையுண்ணுமூண் எனவரும். இனி, செய்த என்பதற்கும் இவ்வாறே யான் உண்ட இல்லம், நீ உண்ட இல்லம், அவன் உண்ட இல்லம் என்றாற்போல மூன்று இடத்திற்கும் இவ்விடத்து வாய்பாட்டு விகற்பங்களும் அறிந்து ஒட்டிக்கொள்க.

ஈண்டுச் செய்யும் என்பது முற்றும் எச்சமும் என இருவீற்றதற்கும் சிறப்புடைமையின் முற்கூறப்பட்டது. மற்றுச் செய்யும் என்பது 'பல்லோர் படர்க்கை' என் புழிக் கூறிற்றாகலின் ஈண்டுக் கூறவேண்டா எனின், ஆண்டுமுற்றாய நிலைமைக்குக் கூறியது. ஈண்டு அஃது எச்சமாகிய நிலைமைக்குக் கூறியது எனக் கொள்க.

மற்றது அவ்விருநிலைமையும் பெயரொடு முடிய மேல் அவ்வேறுபாடறியுமாறு என்னை எனின், முற்றுப் பெயர் கொண்டவழி மற்றோர்சொல் நோக்காது செப்பு ........க்காற்போல அமைத்துமாறும் எச்சமாய் பெயர் கொண்டக்கால் அமையாது மற்றுமோர் சொல் நோக்கிற்றுப்போல நிற்கும் என்பது.

இனி முற்றுயவழி உண்ணும் என்று ஊன்றினாற் போல நலிந்து சொல்லப்படும் என்றும், எச்சமாயவழி ஊன்றாது நெகிழ முடிபுசொல்லப்படும் என்றுங்கொள்க. அஃதேல் "பல்லோர் படர்க்கை" என்புழிக் கூறியது முற்றுக்கு என்றும், ஈண்டுக் கூறியது எச்சத்திற்கு என்றும் பெறுமாறு என்னை எனின், ஈண்டுச் செய்த என்பனோடு பகுத்து முடிபு கூறினமையானும், ஆண்டு முற்றுயவழிக் கொள்ளாதனபற்றி விலக்கினமையானும் பெறும் என்பது.

மற்று, இம் முற்றுநிலைமையையும் எச்சநிலைமையை யும் இரண்டிரண்டாகப் பகுத்தோதாதது என்னை எனின், பொருள்வேற்றுமையல்லது வாய்பாட்டு வேற் றுமையின்மையின் கூறாராயினார் என்பது. இவ் வறு வகைப் பெயருள்ளும் வினைமுதற்பெயரொழித்து ஒழிந் தவற்றிற்கெல்லாம் வினைமுதற்பெயர் மூன்வந்தல்லது பொருள் முற்றாது என்பதூஉம், வினைமுதற்பெயர் வருவழிப் பின்னின்ற எச்சத்தோடு எழுவாயாய் இருக் கின்றதோ,பிறவேற்றுமையாயினைகின்றதோ என்னும் விகற்பமும், ஈண்டு வினைமுதற்பெயரேயன்றிப் பிற பெயரோடு முடியாதற்குக் காரணம் 'வினையே செய்வது' என வினையிலக்கணம் கூறியவழி வினைச்சொற்கு உறுப்பாய்ப் பிறபெயரும் புக்கமையாது என்பதூஉம், அவ்வெட்டனுள் கடைக்கண் இரண்டும் ஒழிய மற்றை ஆறும் ஈண்டோதப்பட்டன என்பதூஉம் அறிந்து கொள்க.

யான் ஆடை ஒலிக்கும் இல்லம், ஆடை ஒலித்த கூலி என்றாற்போல்வன முடியுமாறு என்னை எனின், அவ்வினையிலக்கணத்துள் இன்னதற்கு இது பயன் என்னும் அவ்விரண்டெனப் பெயர்வகையாகலின் தன்னின முடித்தல் என்பதனால் கொள்ளப்படும் என்பது. "மற்றிந்நோய் தீரும் மருந்தருளாய் ஒண்டொடீ" எனவும், "நின்முகங் காணு மருந்தினேன் என்னுமால்" எனவும் வருவனவாமாறு என்னை எனின், தீரும் மருந்து என்பது தீர்தற்குக் காரணமாகிய மருந்து என்றது காண்டல் காரணமாக அதன்காரியமாகப் பிறந்த மருந் தாதற்றன்மைய என்றவாறு. இவ்வாறுவருங் காரணப் பெயரும் காரியப்பெயருமாய் வருவன அவ்விலக்கணம் எட்டனுள்ளும் அடங்காமையின் ஒன்றென முடித்தல் என்பதனாற்கொள்ளப்படும். யான்செல்லும் ஊர், யான் போந்த ஊர் என்பன நிலப்பெயருள் அடங்கும். 'ஊர்களிறு மிதித்த நீர்' எனவும், 'நூலாக் கலிங்கம்' எனவும், 'எள்ளாட்டின எண்ணெய்' எனவும், உண்ட எச்சில் எனவும் வருவன செயப்படுபொருளின் விகற்ப மாக்கி அதனுள் அடக்கிக்கொள்க. இவ்வாறு வரும் பிறபெயர் விகற்பங்களும் அறிந்து அடக்கிக்கொள்க. அவையாவன தேரோடும் புறம், 'சுண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி' என்றாற்போல்வன. இனிச் செய்யும் என்பது செய்யாநிற்கும் எனவும், செய்த என்பது செய்யாநின்ற எனவும் வரும் வாய்பாட்டுவேற்றுமையும் தன்னினமுடித்தல் என்பதனாற்கொள்க. இனிச் செய்த என்பதன் குறிப்பாய் இன்ன அன்ன என்ன எனவும், கரிய செய்ய எனவும் வரும் இவையும் அதனாற்கொள்க.

அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே. (237)

என் - எனின், செய்யும் என்பதற்கு இன்னும் முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

இ-ள்: மேற்கூறிய அறுவகைப் பெயரோடு முடிந்துவருமிடத்துச் செய்யும் என்னும் சொல் முன் "பல்லோர் படர்க்கை" என்றதற்கண் வரையப்பட்ட மூன்று கூற்றின்கண்ணும் உரிமையுடைத்து என்றவாறு.

மூன்று கூறுவன பல்லோர் படர்க்கையும், முன்னிலையும், தன்மையும். அவையாவன: அவருண்ணும் இல்லம், அவருண்ணும் சோறு, அவரோதுங்காலை, அவர் எறியுங்கல், உண்ணுமவர் வந்தார், அவருண்ணும் ஊண் இவை பல்லோர்படர்க்கை. நீயுண்ணும் இல்லம், நீயிர் உண்ணும் இல்லம், நீ உண்ணும் சோறு, நீயிர் உண்ணும் சோறு, நீ ஓதுங்காலை, நீயிர் ஓதுங்காலை, நீ எறியுங்கல், நீயிர் எறியுங்கல், உண்ணும் நீ வந்தாய், உண்ணு நீயிர் வந்தீர், நீ உண்ணுமூண், நீயிர் உண்ணுமூண் இவை முன்னிலை. நானுண்ணும் இல்லம், யாமுண்ணும் இல்லம், நாம் உண்ணும் இல்லம், யானுண்ணும் சோறு, நான் உண்ணும் சோறு, யாமுண்ணுங்காலை, நாமுண்ணுங் காலை, யானெறியுங்கல், நானெறியுங்கல், யாமெறியுங்கல், நாம் எறியுங்கல், உண்ணும்யான் வந்தேன், உண்ணும்யாம் வந்தோம், யானுண்ணுமூண், நாமுண்ணு மூண், யாமுண்ணுமூண் இவை தன்மை. யானும் நீயும் உண்ணுமில்லம், யானுமவனும் உண்ணுமில்லம், யானும் நீயும் அவனும் உண்ணுமில்லம் என்றாற்போலவரும் வாய்பாடும் ஒட்டிக்கொள்க.

இதனாற்சொல்லியது, செய்யும் என்பதற்கு முற்றாய வழி விலக்கிய இடங்கள் -எச்சமாயவழி வரும் என இறந்ததுக்காயிற்று......... (கூஎ)

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா. 238

என் - எனின், பெயரெச்சமும் வினையெச்சமும் தனித்தனி முடியுமாறு கூறிவிட்டு, இனி அவ்விரண்டற்கும் உடனெய்துவது ஓரிலக்கணமுணர்த்தல்நுதலிற்று.

இ-ள்: பெயரெச்சமாகிய சொல்லும், வினையெச்சமாகிய சொல்லும் தொழிலினை எதிர்மறுத்துச் சொன்னவிடத்து அவ்வச் சொல்லாதற்பொருண்மை நிலையில் வேறுபடா என்றவாறு.

உ-ம்: உண்ணும் சாத்தன் என்பது உண்ணாச் சாத்தன் எனவரும். செய்த என்பதற்கு இதுவே மறை. கரியசாத்தற்குச் செய்ய சாத்தன் எனவும், நல்ல சாத்தற்குப் பொல்லாச் சாத்தன் எனவும், தீய சாத்தன் எனவும் வரும் பெயரெச்சக் குறிப்பு மறைவிகற்பமும் அறிக. இம்மறைக்கண் உண்ணாச்சாத்தன் என ஆகார வீறுமே நிற்கும். இவை பெயரெச்சம்.

இனி, வினையெச்சம் உண்டுவந்தான் என்பது, உண்ணாது வந்தான் எனவரும். இவ்வெச்சம் சோறு உண்டாயிருந்தது எனவும், சோறு ஆவதாயிருந்தது எனவும் ஓர் சொல்லடுத்தபோது சோறின்றி எனவும் வேறுகுறிப்பு வாய்பாட்டதாம் எனக் கொள்க. செய்யூ, செய்பு என்பனவற்றிற்கும் இதுவே மறை.

இனிச் செய்தென என்பது முதல்வினையோடு முடிந்தவழி இம்மறையானேவரும். மழை பெய்தென மரங்குழைத்தது எனப் பிறவினையாயவழிச் செய்தென் எச்சத்து எதிர்மறையே தனக்கு மறையாய், மழை பெய்யாமல் மரங்குழையாதாயிற்று எனவரும். இனிச் செய்யியர் செய்யிய என்பன இரண்டற்கு மறைபடுவழித் தன்வினை பிறவினை என்னும் இருவழியுஞ் செயவென்னெச்சத்தின் மறையானே முடியும். மழைபெய்யாமல் எழுந்தது, மழைபெய்யாமல் மரம் குழையாதாயிற்று. இனிச் செய்யிய என்பதற்கும் இவ்வாறே கொள்க. செயின் என்பதற்குச் சொற்றன்னன் மறையின்றி மழை பெய்யாவிடின் அறம்பெறாது, மழைபெய்யாவிடின் மரங் குழையாது எனப் பிறசொல்லானே மறையாய் வரும் போலும்.

21. * * *

"மண்முதலைந்து" என்பது முற்கூறிய தொண்ணூற்றாறு தத்துவமும் இவை என்கின்றது. ஈண்டு 'மண்முதலைந் துண்ணிலையோ ரிருபத் தைந்து,' என்பதற்கு வருமாறு. இரண்ணியகருப்ப வேதாந்தத்தில்,

अस्थिचर्म ततो मांस नाडीरोमाणि भूगुणाः ।
मूत्रं श्लेष्मा तथा रक्तं शुक्लं मज्जा त्वपां गुणाः ॥
निद्रा क्षुधा तृषा ज्ञेया मैथुनालस्य मग्निजाः ।
प्रपातं तरणारोहौ वायोरुत्थानरोधने ॥
कामक्रोधौ लोभभये मोहो व्योमगुणास्तथा ।

என வரும். இவ்வாறு ஞானசித்தியிலும்,

अस्थि मांसत्वचं मेदो रोममेदिनि पञ्चकम् ॥

எனற்றொடக்கங் காண்க. வருகோச மைந்தாவது:— ஞானசித்தியில்,

अन्न प्राणमनो विज्ञानानन्दैः पञ्चकोशकम् ।

என வருமாற்றான் உணர்க. அவத்தை அஞ்சென்பது அதிலேயே,

जाग्रत्स्वप्नसुषुप्तं च तुर्यातीतं च पञ्चकम् ।

எனவரும். எண்ணிய தாதுக்க ளெட்டென்பது பரிபூரணசித்தியில்,

இரதநல் லுதிர மற்றை இறைச்சிமே லிலங்கு மென்றோல்
வரிதரு மத்தி மச்சை வாய்ந்தசுக் கிலமே தைமென்
றுரைதரு தாது வெட்டு முண்டசோ றுதக மொத்து
விரிதரு விதங்க ளெட்டும் விளைந்தவா விளம்ப லுற்றேன்.

என வருமாற்றான் உணர்க. விகாரமெட்டாவன அதிலே தானே,

"இரதாதி யாலா மெய்யி லெய்துயிர் வினைக்கீ டாகப்
பொருதுயர் மிகுதி யாகப் புகுமவை யெவைதா னென்னி
லுரைதரு காம கோப லோபம்பை சூன்யக......என
மருவுமாற் சரிய மோக மதமெம்மை யெனவி காரம்."

என வரும். வாசலெட்டோடொன்று ஆமாறும் அதிலேயே,

சோத்திரங்கண் மூக்குத் துவாரமிரு மூன்றாக
வாய்த்தசல மலவாய் வாயொன்றென்றாக
ஊத்தை மலவுடலுக் கொன்பது வாய்தலும் படைத்துக்
காத்தழிவு செய்பவரைக் காணார்கண் காணாரே.

என வரும். நாடிகள் பத்தாவன:—

इडा च पिङ्गला चैव सुषुम्ना च तथैव च ।
गान्धारी हस्तिजिह्वा च पूषा चैव यशस्विनी ॥
अलम्बुषा कुहूश्चैव शङ्खिनी दशनाडिका ।

எனும் ஆகமத்தால் உணர்க. ஈரைந்து வாயு என்பது சுப்பிரபேதத்தில்,

तासु नाडीषु चान्तः स्थाः प्राणाद्या दश वायवः ।
प्राणोऽपानः समानश्च व्यानोदानौ च वायवः ॥
नागः कूर्मश्च क्रकरो देवदत्तो धनञ्जयः ।
दश प्राणा इमे प्रोक्ता वायवस्त उदाहृताः ॥

என வரும். மண்டலம் மூன்றென்பது,

तत्र देहे समाख्यातं सूर्यसोमाग्निमण्डलम् ।

என வரும். மல மூன்று குண மூன்றென்பது ஞான சித்தியில்,

आणवादिमलं त्रेधा सात्विकादि गुणास्त्रिधा ।

என வரும். வினை இரண்டென்பது புண்ணியபாவங்கள். இவ்வாறு தொண்ணூற்ரூறு தத்துவமென்றது மூற் கூறிய இருபத்துநாலுட் பூதம் ஐந்தும் ஈண்டு எண்ணப் படுகையால் மற்றப்பத்தொன்பதும் கால, பரம வியோம மபர மென்று மூன்றும் நீங்கலாக் கொண்டு தொகை செய்தது. இவ்வாறன்றிப் பரிபூரண சித்தியில் வாத பித்த சிலேஷ்ம மென்னும் பிணித்திரயமும் மூலாதார சுவாதிஷ்டான மணிபூரக அநாஹத விசுத்தி ஆஞ்ஞாத் தானம் ஆன ஆருதாரமும் பிறவும் கூட்டி விரித்திருக் கும். இவ்வாருகவும் 'நவில் கால பரம வியோம மபரமுங்கூடு' மென்றது முன்னர்ப் பிரதானதத்துவங்க ளாகக் கூறும் இருபத்துநான்கொடு புருடதத்துவங் கூடுதல் போலே இவ்வையுங் கூடுமென்றற்கு. அன்றித் தொண்ணூற்ரூறேடு கூடா என்க. இவ்வாறன்றி...... வேதாந்ததத்துவம் இருபத்தெட்டிற் சத்தாதி தன் மாத்திரைகளைந்துங் கால பரம வியோம மபரமென்னும் மூன்றுமாக எட்டுத்தள்ளி மற்றப்புருடன்முத விருபது பிரதான தத்துவங்களோடு..............ண்டு மேடணை மூன்றும் பிறவும் முற்கூறியவற்றுட் கூடுவனவும் கூட்டித் தொண்ணூற்ரூறு தத்துவம் என்பாரும் உளர். அது குறுந்திரட்டில்,

பூதமைந்து முடலிரண்டுங் கோசமைந்தும்
பூதாம்ச மையைந்தும் பாவமாறும்
வாதமைந்தோ டைந்துவரு காரணம்மந்நான்
கவைவிடயம் பதினுன்கு மலங்கள்மூன்றும்
ஏதம்வந்த குணமூன்று மியல்பிலாத
வேடணைக ளவைமூன்று மவத்தையைந்தும்
பேதம்வந்த விவையுணர்ந்தா லின்னுமாகப்
பேசிடுவர் தத்துவந்தொண் ணூற்றன்றே.

என ஞானதீபிகையிலெடுத்தவாற்ருன் உணர்க. ஈண்டு உடலிரண்டென்றது ஸ்தூல சூக்கும பேதத்தால். பாவமாறென்றது,

अस्ति जायते विवर्धते विपरिणमते अपक्षीयते विनश्यति

என்று பாவவிகாரம் ஆறு என மாயாவாதத்திற் கூறுவனவாம். 'பேதம் வந்த விவையுணர்ந்தான் புருட தத்துவம்' என்க. இன்னும் அதனுள்,

பூதங்க ளோரைந்தும் பொருளிருபத் தைந்தும்
புலனைந்தும் பொறியைந்துங் கான்மிகமோ ரைந்து
மேதஞ்சேர் கோசமைந்து மவத்தை யைந்து
மினநாடி யோரைந்தும் வாயுப் பத்துங்
கோதண்டக் கரணங்க ளொன்குமல மூன்றுங்
குண...ன்னும் மூன்றே டணைகள் மூன்றும்
பேதங்கொ ளுடம்பிரண்டும் வினையிரண்டும்
பேராம லுணர்புருட னிவைதொண் ணூற் றாறே.

என வருவதுங் காண்க. ஈண்டுப் பிணிமூன்றும் வினையிரண்டும் நாடிகள் பத்துமாகப் பதினைந்துங் கூட்டி முற்கூறியவற்றுட் பாவமாறும் விடையம் ஒன்பதும் கூட்டாமற் றொண்ணூற்றாறு என்பது கண்டுகொள்க. இவ்வாறு தொண்ணூற்றாறாகத் தத்துவ கற்பனை கூறுவதென்னெனில் திருமந்திரத்தில்,

முப்பது முப்பது முப்பத் தறுவருஞ்
செப்பு மதிலுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்பு மதிலுடைக் கோயில் சிதைந்தபி
னொப்ப வனைவரு மோட்டெடுத் தாரே. (154)

எனக் கூறியவாறே,

பூதி நிறமே புறநிலையைங் கோசம்
வாதமு மீரேழ் தன்னிலை மன்னையைர்
தோது மலங்குண மாறாறு தாரத்தோ
டாதிய வத்தைக் கருவிதொண் ணூற்றாறே.

என வருதலின். இது சித்தாந்தத்துமொக்கும். [1]'முப்பது முப்பது முப்பத்தாறு முப்பது மிடுகுரம்பை' என்னும் தேவாரத்தால் அந்தத் தொண்ணூற்றாறும் வேறுபட வரும் என்பது மேற்கூறுதும். அதனானேயன்றே,

ஆகின்ற தொண்ணூற்றொ டாறும் பொதுவென்ப
ராகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வைணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே.

(திருமந்திரம். 2179)

எனச் சமயிகள் தத்துவங் கூறும்வழித் தொண்ணூற்றாறென்பது வேதாந்த சித்தாந்தம் இரண்டிற்கும் உள என்பது தோன்றப் பொது என்பதூஉம். இவற்றின் தோற்றமும் வியாபாரமும் மற்றும் ஈண்டு விரிப்பிற் பெருகும். மேற் சித்தாந்த தத்துவம் கூறுவழி விரித்துணர்த்துதும். இவ்வாறு வருந் தத்துவ விவேகமின்றேற் பந்த நீங்கிச் சுவரூப ஞானங் கூடாமையிற் றத்துவ விவேகம் பண்ணுதல் மோக்ஷகாமிகட்கு நியாயமாகலின் ஈண்டுச் சிறிது விரித்தது. அது,

[2]சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

என வள்ளுவநாயனர் கூறியவாறே, தத்துவதீபிகையினும்,

பத்திசெய் காரியன் றாள் பணிந்துப தேசங் கேட்டுத்
தத்துவ மெண்ணி நீங்கித் தம்மைத்தா மறிய மாட்டார்
சுத்தமாம் பரமே யாகித் தொடக்கறுத் திருப்பே மென்று
கத்துதல் பிச்சைக் குச்சொல் கட்டுரை யாகு மன்றே.

---

[1] அப்பர். புகலூர்-திருவிருத்தம், பா-3. [2] குறள். 27.

என வருமாற்றானும் உணர்க. பிறவும் ஈண்டுச் சுத்த சைவ வேதாந்தத்திற் கியைவன விரித்துணர்ந்து கொள்க. 21

22. * * *

'இன்னணம்' என்பது சுத்த சைவ வேதாந்தத்திற்குச் சிறந்த பிரதான தத்துவங்களாமாறு கூறுகின்றது. அது திருமந்திரத்தில்,

நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்
வேறான வையைந்து மேலாகு மப்பரங்
கூறா வியோமம் பரமெனக் கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்தி தத்வமே.

என வருமாற்றான் உணர்க. அவ்வாறு ஞானசித்தியில்,

पञ्चविंशतिः (पुरु)षः परः परं च व्योमकम् ।
व्योमातीताष्टविंशति...इत्येवं तत्वनिर्णयम् ॥

எனத் தத்துவநிர்ணயப்பிரகரணத்தில் வருமாற்றானும் உணர்க. இனிச் சித்தமே குணமென்னுமாற்றால் ஒன்றென்னது, சித்தமும் பகுதியும் இரண்டென வேறாக்கிப் பகுதியை நினையாது சித்தங் கூட்டி இருபத்துநாலு தத்துவமென்றதற்கு வருமாறு. பரிபூரணசித்தியில்,

எண்ணிய விருபது மிதனின் மேன்மனம்
பண்ணிய புத்தியாங் கார சித்தமுந்
திண்ணிய விவையுணர் பவனுஞ் சேரவே
யுண்ணிலை பஞ்சவிம் சதியென் றோர்கவே.

இவ்விருவகைக்கும் ஞானசித்தியில்,

मूलप्रकृतिरव्यक्त मव्यक्तात्तु महान्भवेत् ।

எனவும்,

व्यक्तं चित्तं तदुत्पन्नं चिन्तितं चित्तरूपकम् ।

எனவும் வருமாற்ருன் உணர்க. 22

23. * * *

'உரையிவற்றின் மேலாக' என்பது சித்தாந்தத்திற் கூறும் வித்தியா தத்துவ சிவ தத்துவங்களை வேதாந் தத்தினடக்குமாறும், அடக்காது விரிக்குமாறும் கூறு கின்றது. ஈண்டு அடக்குமாறு திருமந்திரத்தில்,

ஐயைந்து மான்மாவி லாறோ டடங்கிடு
மெய்கண்ட மேன்மூன் றடங்கும் வியோமத்திற்
*கைகண்ட சத்தி சிவம்பரத் தேகாண
வெய்து நாலேழும் மிவைக ளடங்குமே. (2239)

எனவரும் வேதாந்தத் தடங்கக் கூறிய குரவர்வழி தத்துவராமர் முதலியோர். விரித்துக் கூறிய குரவர்வழி நிராமய தேவர் முதலியோர். இவ்விருவகையும் வேதாந்த பக்ஷமென்க. 23

24. * * *

"மாயையது விந்துவினல்" என்பது அந்த முப்பத்தாறு தத்துவங்களுமாமாறு கூறுகின்றது. அது ஞானசித்தியில்,

सर्ववेदागमार्थस्य यत्सारं तत्परात्परम् ।
यत्तत्वं तत्पराकारं परबिन्दूद्भवं ततः ॥
परात्परादि यातान्तं द्वादशं तत्त्वमुच्यते ।
परात्परात्परोत्पन्ना परशक्तिस्तदुद्भवा ॥

---

*'கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
எய்யும் படியடங் குந்நாலேழ் எய்தியே'

என்பது அச்சுப்புத்தகப் பாடம்.

इच्छा ज्ञान क्रियाशक्ति स्तत्पराशक्तिरुद्भवम् ।
ज्ञानेच्छा स्वक्रियामध्ये शिवशक्ति सदाशिवम् ॥
नादबिन्दु विभेदोक्तं षट्तत्त्वं तत्प्रकाशितम् ।
सदाशिवान्महेशस्य मध्ये रुद्रोद्भवं तथा ॥
रुद्रोत्पत्तिर्यथा विष्णुस्तथा उत्पन्न आत्मभूः ।
सृष्टिकाल विधानोक्तं सर्वतत्वप्रकाशितम् ॥
तन्मध्ये द्रुहिणादीनां चतुष्कं सकलोद्भवम् ।
सादाख्यं बिन्दुनादोक्तं सकलाकलमुच्यते ॥
शिवं शक्तिपरं त्रीणि परात्पर चतुर्थकम् ।
इच्छा ज्ञानक्रियात्मानं नि.........कीर्त्यते ॥
त्रिवर्ग विस्तीर्णम (ध्य) (स्य) स्थे आत्मविद्याशिवत्रयम् ।
षट्त्रिंशत्तत्व भेदोक्तं तत्त्वीण्युद्भवसाधनम् ॥

என வருமாற்றான் உணர்க. ஈண்டு பராத்பரம் என[illegible] நிருபாதிகமாய்ச் சச்சிதானந்த சுவரூபமாயுள்ள [illegible] பிரமத்தை. அது,

एकान्तेऽवस्थितश्चासौ शिवशक्ति समन्वितः ।

என்னும் ஆகமத்தாற் பராவரை என்னும் சக்தியோடுங் கூடிப் போதானந்தமயமாயிருக்கும். அன்றேல் வேதாந் தம்போலச் சத்தி ..........தாமாம் என்க.

அந்தப் பராபரை என்னும் சத்தியோடு கூடிய பராத்பரமான பிரமத்தினின்று மூண்டாயது பரம். அந்தப் பரமாவது இலயசிவம். அது,

शिवं परात्परं सूक्ष्मं......सर्व गताव्ययम् ।
अनिन्दितमनौपम्यमप्रमेयमनामयम् ॥
शुद्धध्वाच्छिवमुद्दिष्टं परादूर्ध्वं परात्परम् ।

## ; குருஞானசம்பந்தர் கழக 2-வது ஆண்டுவிழா

2—3—52 ஞாயிறு அன்று காலை திருவள்ளுவர் திரு ளும், மாலை கழக ஆண்டுவிழாவும் கொண்டாடப்பெற்றன. ுண்ணமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் ித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர் அவர்கள் காலை ிழாவிற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஜூனியர் வித்துவான் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களிடமிருந்தும், பெருநாவலர். வித்துவான் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களிடமிருந்தும், கல்லூரியில் பயின்று பட்டம்பெற்ற பழைய மாணவர்களாகிய புலவர்களிடமிருந்தும் வந்திருந்த தந்திகளு வாழ்த்துச் செய்திகளும் கழக அமைச்சரால் படிக்கப்பெற்றன. மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் தலைவர் வித்துவான் திரு. க. ஆறுமுகனர் 'உலகப் பொதுநூல்' என்பதுபற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். கல்லூரி முதலாண்டு சி. அய்யாவு 'மகளிர் மறம்' என்பது பற்றியும், ண்டு மாணவர் M. S. சுப்பிரமணியன் 'வாடாமலர்' எ துபற்றியும் பேசினர்கள். முடிவுரைக்குப்பின் கழகச் செ ளர் P. சுப்பையா நன்றி கூற, காலைவிழா இனிது நிறைவெய்தியது.

மாலை 3-மணிக்கு முதலாண்டு மாணவன் S. தியாகராசன் டவுள் வாழ்த்துக்கூற ஆண்டுவிழா தொடங்கிற்று. வித்து ான் திரு க. ஆறுமுகனர் அவர்கள் தலைமை ஏற்ருர்கள். ஆண்டறிக்கை அமைச்சரால் வாசிக்கப்பட்டது. வித்துவான் ரு க. வெள்ளைவாரணனர் அவர்கள் திருமுறைகளில் திருக் றள் ஆங்காங்கு சொல்லாக பொருளாக - தொடராக - ருத்தாக அமைந்து ஒளிர்வதை எடுத்து விளக்கிக்காட்டி ர்கள். கோபல் பரிசு என்று தலைப்பில் I. U. C. மாணவர் ந்தரராஜன் பேசினர். கவிதாசக்தி என்பதுபற்றிச் சிரோ ணிப்பகுதி மாணவர் கணேசன் பேசினர். தலைவர் முடிப் க்குப்பின் கல்லூரி யாசிரியர் வித்துவான் திரு. V. S. தேசிகர் அவர்கள் நன்றியுரை கூறக் கடவுள் ன் விழா இனிது முடிந்தது.

## திருபுவனத்தில் குருபூஜைவிழா.

தருமபுர ஆதீனம் பதினேழாவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா 14—2—52 மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ கம்பகரேசுவரர் ஆலயத்தின் திருமுன்பு விளங்கும் குருமூர்த்தத்திற்கு, தேவஸ்தானக் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விசேஷ அபிஷேக ஆராதனை செய்து வழிபாடாற்றினார்கள். மாலை மதுரை ஆதீனம் வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் குடந்தை நகரமன்ற உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. S. சுந்தரேசன் செட்டியார் அவர்கள் B. A., L. T., 'குருவழிபாடு' என்பதுபற்றியும், சீகாழி சபாநாயக முதலியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. K. அரங்காசாரியார் அவர்கள் B. A., B. T., 'சமய நம்பிக்கை' என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## திருக்கோளிலியில் திருவிழா.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் மாசிமக நெல் மகோத்ஸவ விழா 9—3—52 முதல் நடைபெற்றுவருகின்றது. அன்று சுந்தரர் பரவை மாளிகைக்குச் செல்லுதல் மறுநாள் குண்டையூர் கிழார் பரவை மாளிகைக்குச் செந்நெல் முதலியன கொடுத்தல், 11உ சுந்தரர் நெல்மலைபார்க்கக் குண்டையூருக்கு எழுந்தருளல், பெருமானிடத்தில் ஆள் வேண்டிப் பதிகம் பாடுதல், பெருமான் பூதகணங்களுக்கு ஆணையிடுதல் முதலியன விழாவாக நிகழும்.

9—3—52 அன்று திருவாரூர் போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் 'தெய்வத்தமிழ்' என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். 10—3—52 ஷை ஸ்கூல் ஆசிரியர் திரு. சிவ சிவராஜப்ப முதலியார் அவர்கள் B. A., B. T., 'பிறவிப்பயன்' என்பது பற்றிப் பேசுவார்கள். மறுநாள் 11-3-52 மாலை 'பக்திமுதிர்ந்த பாலகனார்' என்னும்பொருள்பற்றித் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர் (நாகை நாஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்) வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—3—195